# ஆறு செல்வங்கள்

கி. ஆ. பெ. விசுவநாதம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# ஆறு செல்வங்கள்

முத்தமிழ்க் காவலர், கலைமாமணி

டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம், டி. லிட்.,

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற்பதிப்பு : ஆகஸ்டு, 1964
இரண்டாம் பதிப்பு : ஜூன், 1968
மூன்றாம் பதிப்பு : டிசம்பர், 1975
நான்காம் பதிப்பு : 1983
ஐந்தாம் பதிப்பு : 1988
ஆறாம் பதிப்பு : 1994

விலை : ரூ. 7-00

மாருதி பிரஸ்,
178, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை - 600 014.

மகாவித்வான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை
அவர்கள்

# அணிந்துரை

மலர்கள் பலவகை, அவற்றுட் சில, அழகுமட்டும் கொண்டு, காண்பார் கண்களைக் கவரும்; சில குறைந்த அழகும் நிறைந்த மணமும் உடையவாய்க் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும். அழகும் சுவையும் மணமும் ஆய்வதில் அருந்திறன் வாய்ந்தவை தேனீக்கள். அவை, 'இணரூழ்த்தும் நாறா மலர்'களை நாடாது, கண்ணைக் கவர்ந்து சுவையும் மணமுமுள்ள தேன் விருந்தளிக்கும் மலர்களையே நாடிச்சென்று தாம் பெறும் தேனின்பத்தைப் பிறரும் பிறவும் பெற விழைவனபோலத் தேனைப் பத முறச் செய்து உதவும் பண்பு வாய்ந்தவை.

நல்லறிஞரும் தேனீயனையர்; தாம் தேர்ந்து பயின்ற நன்னூற் பொருள்களை வகைப்படுத்திச் சின்னாளுணர்ந் தாரும் கற்றுப் பயன்பெறும் வகையில் நூல் வடிவாக்கித் தருபவர். முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதரும் அத்தகைய அறிஞர் குழுவைச் சார்ந்தவர். அவர் தரும் நூல்கள் அறிவின் களஞ்சியம் எனலாம்; தெவிட்டாத தேன்பிலிற்றும் தேனடை எனினும் இழுக்காது.

செல்வத்தின் வகையைச் சிறக்க விளக்கும் இச் சிறு நூல், கி. ஆ. பெ. வி. யின் கலை நலங்கனிந்து விளங்குவது; பலவகைக் கருத்துக்களைச் சில பக்கங்களில் தெள்ளிதின் விளக்குவது; உருவிற் குறியதாயினும், உறு பயனளிப்பதில் 'தானே உவமை தனக்கு.' பயன்பெற விழையும் பண்பு டையார் படித்துச் சுவைத்துப் பயனடைக!

விசுவநாதரின் வியன் தமிழ்த் தொண்டும்
விரிவுடை மனமும் வளர்க! வாழ்க!

தமிழகம்
2-8-'64

மே. வீ. வே. பிள்ளை

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | கல்விச் செல்வம் | 5 |
| 2. | கேள்விச் செல்வம் | 11 |
| 3. | அருட் செல்வம் | 19 |
| 4. | பொருட் செல்வம் | 26 |
| 5. | அறிவுச் செல்வம் | 35 |
| 6. | மக்கட் செல்வம் | 41 |

# 1. கல்விச் செல்வம்

செல்வம் பலவகை. அவற்றுள் கல்வி ஒருவகை. இதனை "ஈடு இலாச் செல்வம்" என்றவர் திரு. வி. க. "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்பது வள்ளுவர் வாக்கு. "கேடு இல்லாத சிறந்த செல்வம்" என்பது இதன் பொருள். பிற செல்வங்கள் கேட்டையும் விளைவிக்கும் என்பது கருத்து.

பிற செல்வங்கள் நீரானும் நெருப்பானும் அழியக் கூடியன. ஆனால், கல்விச் செல்வமோ வெள்ளத்தால் அழியாது, வெந்தழலால் வேகாது, கொள்ளையிட முடியாது, கொடுத்தாலும் குறையாது. இவ்வுலகிலுள்ள செல்வங்களில் பங்காளிகளால் பங்கிட்டுக் கொள்ள முடியாத ஒரே செல்வம் இக் கல்விச் செல்வமாகும்.

ஒரு நாட்டின் மன்னனுக்குப் பிற நாடுகளில் அவ்வளவு சிறப்பு இராது. ஆனால், கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாம் சிறப்பு. இதிலிருந்து தெரிவது என்னவெனில், "ஒரு மன்னனிடத்திலுள்ள செல்வங்களனைத்திலும் கற்ற வனிடத்திலுள்ள கல்விச் செல்வம் ஒன்றே உயர்ந்து காணப்படும்" என்பதே.

பிற செல்வங்கள் ஒருவனிடம் சேர்ந்தால், அவனிடம் நிலைத்து நில்லாமல் அவனை விட்டு விலகி ஓடிப்போய் விடும். கல்விச் செல்வம் ஒருவனை அடைந்துவிட்டால்

வாழ்விலும் தாழ்விலும் மட்டுமல்லாமல், சாவிலும் உடனிருந்தே அழியும். எப்படி இச் செல்வம்?

பொருட் செல்வம் அனைத்தையும் அதை உடையவனே வழி நடத்துவான் கல்விச் செல்வம் ஒன்று மட்டுமே தன்னை உடையவனை வழி நடத்தும். எப்படி இதன் வலிமை?

கல்விச் செல்வம் பெற்ற குடும்பத்திற் பிறந்த பிள்ளைகளுக்குச் சில தலைமுறை வரையிலாவது அந்த மணம் கமழ்ந்து கொண்டிருக்கும். பிற செல்வங்களைப் பெற்ற குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு அச் செல்வம் அடுத்த தலைமுறை வரையிலாவது நிலைத்திருக்கும் என்பது பத்தில் ஒன்பது பங்குக்கும் உறுதியில்லை.

பிற செல்வங்களைத் தேடிப் பயன்பெற்று மகிழ்ச்சியுற வேண்டுமானால் அவன் கல்விச் செல்வத்தையும் பெற்றிருத்தல் வேண்டும். இன்றேல் எச்செல்வத்தைப் பெற்றிருப்பினும் அவன் அதனாற் பயன் பெறான் என்பது மட்டுமல்ல, சில பொழுது துன்பத்தையும் அடைய நேரிட்டு விடும்.

கல்லாத மக்களும் களர்நிலமும் வேறல்ல. இரண்டும் ஒன்றே. இவைகளைப் பேணுவார் எவருமில்லை. இவைகளால் பயனும் எவருக்கும் இல்லை. ஆதலால் இவை இருப்பதும், அழிவதும் ஒன்று போன்றதே.

செல்வந்தர் முன்னே வறியவன் நிற்பது காணக் கூடிய காட்சியே. ஆனால் கற்றவர் முன்னே கல்லாதான் நிற்பது காணச் சகியாத காட்சியாகும்.

மாடுகளின் முன்னே மக்களை வைத்து ஒப்பு நோக்குதலும் உண்டு. எப்போது? உழைக்கும்போது. ஆனால்

கல்லாதவன் முன்னே கற்றவரை வைத்து ஒப்பு நோக்குதல் எங்கும் எப்போதுமில்லை.

விதைக்காதபோது விளைவும், சமைக்காதபோது உணவும், உழைக்காதபோது பலனும் இல்லாததுபோல கல்லாதபோது சிறப்பும் இல்லை.

தோண்டாத மணலுக்குள் நீர் மறைந்திருப்பது போலக் கல்லாதார் உள்ளத்தில் அறிவும் மறைந்திருக்கிறது. தோண்டத் தோண்ட நீர் சுரப்பது போல் கற்கக்கற்க அறிவும் சுரக்கிறது. எந்த அளவிற்குத் தோண்டினாலும் அந்த அளவிற்கு நீர் நிரம்பிக் காணப்படுவது போல, எந்த அளவிற்குக் கற்றாலும் அந்த அளவிற்கு அறிவும் நிரம்பிக் காணப்படும்.

அறிவு இல்லாதவர் என்று எவரும் எங்கும் இல்லை. ஆனால், அதை வளர்த்து ஒளிவீசச் செய்வது இரண்டு. ஒன்று, கல்வி; மற்றொன்று பட்டறிவு (அநுபவம்). பட்டுப் பட்டு அறிவை வளர்க்கப் பல ஆண்டுகள் வேண்டும். ஆனால் கல்வி கற்று அறிவை வளர்க்கச் சில நாட்கள் போதும்.

கல்விச் செல்வம் கடல் போன்று பரந்து விரிந்த தொரு பெருஞ்செல்வம். ஒருவன் வாழ்நாள் முழுதும் படிப்பினும் அதனை முழுதும் பெற்றுவிட முடியாது. இவ்வுலகிலுள்ள மக்களின் கல்விச் செல்வத்தை நூறில் ஒரு பங்கு பெற்றவர் ஆயிரத்தில் ஒருவர்கூட இல்லை எனலாம். ''கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு'' எனக் கலைமகள் கூறுவதாகத் தமிழ் மகள் கூறுகிறாள்.

பல துறையில் பல நூல்களைப் படிப்பதைவிட ஒரு துறையில் சில நூல்களைப் படிப்பது நல்லது. அவற்றையும்

மேற்போக்காகப் படிப்பதைவிடக் கருத்தூன்றிப் படிப்பது நல்லது. ஆம், அகலமாக உழுவதிலும் ஆழமாக உழுவதே நல்லது என்பது அறிஞர்களின் கருத்து.

கல்லாத மக்களிடத்தும் சில பொழுது அறிவு காணப் படும். எனினும் அது குட்டைகளில் தேங்கிக் கிடக்கும் கலங்கிய நீர் போன்றதே. கற்றவருடைய அறிவோ ஆறு களில் ஊறிச் சிலுசிலுத்து ஓடுகின்ற தெளிந்த நீரைப் போன்றது. ''கல்வி வேறு அறிவு வேறு'' என்பதை ஒப்புகிற ஒவ்வொருவரும் ''கற்றவனுடைய அறிவு வேறு'' என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். கற்றவரும் கல்லாதவரும் மக்களே அன்றிக் கற்களே ஆயினும் முன்னது வைரக்கல், பின்னது கருங்கல் என்றாகும்.

''என் மகன் படிக்கவில்லை. எனக்கு இரண்டு எருமைகள் உள்ளன. அவற்றை மேய்த்துக் கொண்டிருக்கிறான்'' என்றான் ஒருவன். அதைக்கேட்ட மதுரைப் பெரும்புலவர் கவிராச செகவீர பாண்டியனார் அவர்கள் கூறியது என்ன தெரியுமா? ''இனி இரண்டு என்று எவரிடமும் கூறாதே, உனக்கு மூன்று எருமைகள் உள்ளன என்றே கூறு'' என்பதே. பாவம்! கல்லாத மக்கள் பொல்லாத விலங்குகள் என்பது அப்புலவர் பெருமகனது கருத்து போலும்.

கல்லாத மக்கள் விலங்குகள் என்பது மட்டுமல்ல, அவர்கள் நிறைந்து காணப்படும் நாடும், ''நாடாகா; அது காடு'' அந்நாட்டை ஆளும் மன்னனும், ''நாடாளும் மன்னனாக'' இல்லாமல், 'காடாளும் வேடனாகவே' காட்சி யளிப்பான்,

கல்விச் செல்வம் இளமையிற் பெறவேண்டிய ஒன்று. முதுமையிற் பெறவேண்டிய செல்வங்களனைத்திற்கும் இது உற்ற துணையாக இருக்கும்; முதுமையிற் கல்வி முயன்றாலும் வாரா. வந்தாலும் தங்கா. முதுமையில் எதுவுமே வராது

என்பதல்ல. வருவதும் ஒன்றுண்டு. அது "கல்லாமற் போனேனே" எனக் கதறியழுது வருந்துவதே. அத்தகை யோர் பாடிய பாடலும் ஒன்றுண்டு. அது,

அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னும்
　　ஆடையும் ஆதரவாய்க்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும் என்னைக்
　　குறித்த தல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்திலே என்
　　துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய
　　பாதகனே.

என்பது.

"இளமையிற் கல்" என்பது ஔவையின் வாக்கு "இளமையிற் கல்லாமை குற்றம்" என்பது விளம்பி நாகனார் சட்டம். "இளமையிற் கல்வியை இழந்தவன், இழந்தவனே" என்பது நன்னெறியார் மொழி. கல்வியை இழந்தவன், கண்களையும் இழந்தவன். "கற்றவன் முகத்திலிருப்பதே கண்; மற்றது புண்" என்பது வள்ளுவன் கண்ட உண்மை. "கற்றவர் கருத்திலும் ஒரு கண் உண்டு" என்பது திருமூலர் கருத்து.

கல்வியிலும் "மெய்க்கல்வி" என ஒன்றுண்டு எனவும் சமயங்கள் கூறும். இறைவனை, "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி" எனவும், "கற்றவர் கருத்தினாற் காண் போன்" எனவும் அறிஞர்கள் கூறுவர். 'இறைவனை வணங்காதவர் கற்றும் பயனடையாதவர்" என்பது திருக் குறள் நெறி.

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே; "கல்லா ஒருவன் குலநலம் பேசுதல் நெல்லினுட் பிறந்த பதராகும்மே; எக்குடிப் பிறப்பினும் யார்வரேயாயினும்

அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்." என்பவை அதிவீரராம பாண்டியரது கருத்துக்கள்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே. வேற்றுமை தெரிந்த நாற் பாலுள்ளும் கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே" என்பது புறநானூற்றுப் புதுமை.

நம் நாட்டில் 1911 ஆம் ஆண்டு எடுத்த மக்கள் எண்ணிக்கைக் கணக்கின்படி படித்த ஆண்மக்களின் எண்ணிக்கை 100க்கு 9; படித்த பெண் மக்களின் எண்ணிக்கை 100க்கு முக்கால். 1921 ஆம் ஆண்டு கணக்கின் படி 100க்கு இது 11ம் ஒன்றே காலுமாக உயர்ந்தது. பின் இது 1931இல் 15ம், 3மாக உயர்ந்து காணப்பட்டது. 1941இல் படித்த ஆண் 20, படித்த பெண் 5. 1951இல் இது 26ம் 8ம் ஆக இருந்தது. 1961இல் படித்த ஆண் 100க்கு 34 வீதமாகவும் படித்த பெண் 100க்கு 13 வீதமாகவும் இருக்கிறது. எனினும் மக்கள் கல்விச் செல்வத்தைப் போதிய அளவு பெற்றதாகக் கொள்ள முடியாது. ஏனெனில் பிற நாடுகளில் கற்றறிந்த மக்களின் எண்ணிக்கை இப்போது 100க்கு 72ம் 61ம், 85ம் 72ம், 91ம் 86ம் ஆகவும் இருந்து வருவதாகவும், சப்பானில் படித்தவர்களின் எண்ணிக்கை 100க்கு 100ஆக இருந்து வருவதாகவும் தெரியவருகிறது.

ஆகவே படி, நன்றாகப் படி; வாழ்வதற்காகவே படி; படிப்பதற்காகவே வாழ். எல்லாவற்றையும் படிக்காதே. படிக்க வேண்டியவைகளை மட்டும் படி, படித்து அறிந்தவைகளைச் சிந்தித்து உணர். நல்லதைக் கொள். பின் அப்படியே நட. ஏனெனில் கல்வியின் குறிக்கோள் அறிவை அடைவது மட்டுமல்ல: அன்பையும் அருளையும் பண்பையும் ஒழுக்கத்தையும் பெற்று நல்வாழ்வு வாழ்வதும் ஆகும்.

வாழட்டும் தமிழகம்!

# 2. கேள்விச் செல்வம்

''கேள்வி ஒரு செல்வம், அதுவும் மிக உயர்ந்த செல்வம்'' என்பது வள்ளுவர் கருத்து. இதனை,

செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம், அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை

என்ற குறள் மெய்ப்பிக்கும்.

பத்து ஆண்டுகள் படித்து அறிபவைகளை, முப்பது ஆண்டுகள் பார்த்து அறிபவைகளை, ஐம்பது ஆண்டுகள் ஆராய்ந்து அறிபவைகளை, ஐந்நூறு மணித்துளிகளில் கேட்டு அறிந்துகொள்ளலாம். இதனாலேயே கேள்விச் செல்வம் தலைசிறந்த செல்வம் எனக் கருதப் பெற்றுவருகிறது.

''கல்வியைவிட உயிர்க்கு உற்ற துணை வேறில்லை'' என்று கல்விச் செல்வத்தை உயர்த்திக் கூறிய வள்ளுவர், ''கற்றிலனாயினும் கேட்க'' எனக் கூறியிருப்பதும், பிறர் ''கற்றலிற் கேட்டலே நன்று'' எனக் கூறியிருப்பதும் கேள்விச் செல்வத்தின் சிறப்பை உணர்த்துவனவாகும்.

மக்களுக்கும், விலங்குகளுக்கும் உள்ள வேற்றுமைகள் பல, அவற்றுள் ஒன்று, ''மக்கள் செவி வழியாகவும் சுவையைப் பெறுவார்கள். மாக்களால் இயலாது'' என்பது,

"உணவு" என்பது வாயால் உண்பது. "உணர்வு" என்பது செவியால் பெறுவது. வள்ளுவர் இவ்விரண்டையும் மாற்றி அமைத்திருப்பது வியப்பிற்குறியதே. இதனைச் "செவிக்கு உணவு" என்பதாலும், "வாய் உணவின் மாக்கள்" என்பதாலும் நன்கறியலாம். இவை இவற்றின் உயர்வையும், இழிவையும் உணர்ந்து வந்தன போலும்.

செவிக்கு உணவு இல்லாதபோதுதான் வயிற்றுக்குச் சிறிது உணவளிக்க வேண்டும் என்பது வள்ளுவர் நெறி. இதனால், கேள்விச் செல்வத்தைப் பெற வாய்ப்புள்ளபோது உண்பதைக்கூட ஒத்திவைக்க வேண்டும் என்றாகிறது.

"கேள்வி ஒரு செல்வம்" என்பதால், எதையும் எவரிடமும் கேட்டுவிடக்கூடாது. கேட்கும்போது "கேட்டுத்தான் ஆகவேண்டுமா?" என்று உன்னையே நீ ஒரு கேள்வி கேட்டுக் கொள். பிறகு யோசித்துக் கேள், அவனும் யோசித்துப் பதில் கூறுவதை மட்டுமே கேள். அதையும் குறைவாகவே கேள். சுருக்கமாகக் கேள். அதையும் மெதுவாகக் கேள் இதுவே கேள்விச் செல்வத்தைப் பெறும் சரியான வழி.

அறிவற்றவர்களிடம் எதையும் கேட்டுவிடாதே. அதனால் இரண்டு வகையான துன்பம் வரும். முதலாவது அவன் தவறாகவும் பதில் கூறிவிடுவான். இரண்டாவது அவன் தன்னைவிட உன்னை மட்டமானவன் என்றும் கருதிவிடுவான். ஆகவே, அறிவாளிகளிடம் மட்டுமே கேள். அதில் இலாபம் கிடைக்காமற் போய்விடினும், நட்டத்திற்கு வழியேயிராது.

ஓயாமற் கேள்வியைக் கேட்டுக் கொண்டிருப்பவன் ஓட்டை வாயன். தேவையற்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருப்பவன் மூடன். இழிவான கேள்விகளைக்

கேட்பவன் மோசமானவன். தெரிந்துகொண்டு கேள்விகளைக் கேட்பவன் கலகக்காரன். தெரிந்துகொண்டதாக நினைத்துக் கொண்டு கேள்விகளைக் கேட்பவன் அறிவற்றவன். தெரிந்து கொள்ள விரும்பித் துடிதுடித்துக் கேள்விகளைக் கேட்பவன் பொறுமையற்றவன். அறிய வேண்டியதை அறிந்து கொள்ள விரும்பித் தகுதியுடையவர்களை அணுகி அமைதியாகக் கேட்டு அறிபவனே அறிஞன்.

ஒரு மனிதனை 'யார்?' என்று அறிய இரண்டுவித வழிகள் உள்ளன. ஒன்று அவனுடைய நண்பர்கள் யார்? என் அறிந்து கொள்வது. மற்றொன்று அவனுடைய கேள்விகள் என்னென்ன? என அறிந்துகொள்வது. முன்னது அவனுடைய நடத்தையையும், பின்னது அவனுடைய அறிவையும் தெளிவாகக் காட்டிவிடும்.

"சாதுக்கு சாது மிலாதோ சங்கே கர்கே ஞானகே தேர்தோ பாத், கத்தைக்கு கத்தை மிலாதோ தோதோமாறே லாத்" என்பது ஒரு இந்துஸ்தானிப் பழமொழி. "சாதுக்களும் சாதுக்களும் சந்தித்துக் கொண்டால் இரண்டொரு பேச்சுக் கள் மட்டுமே பேசுவார்கள். அதுவும் சந்தேகத்தைப் போக்கக் கூடியதாகவிருக்கும். அதுவும். ஞானமார்க்கமானதாகவே யிருக்கும். கழுதையும் கழுதையும் சந்தித்துக் கொண்டால் ஒவ்வொன்றும் மறுபக்கம் திரும்பிக்கொண்டு ஆளுக்கு இரண்டு உதைகொடுத்துக் கொள்ளும்" என்பது இதன் பொருள். கேள்வியின் சிறப்பையும், சந்திப்போரின் தகுதியையும் விளக்க இதைவிட நல்ல பழமொழி வேறில்லை.

கேள்விச் செல்வத்தைப் பெறும் வழியும் இரண்டு. ஒன்று கேட்டு அறிவது மற்றொன்று கேளாமல் அறிவது. "சொல்லாமற் சொல்லுதல்" என்பது குறிப்பினால்

உணர்த்துதல், "நினையாமல் நினைத்தல்" என்பது மறந்து நினையாமல், மறவாமலே நினைத்திருத்தல். "போகாமற் போதல்" என்பது, எங்கு போகிறோம்? என்ற எண்ணமே இல்லாமற் போதல். "கேளாமற் கேட்டல்" என்பது நாமாகக் கேளாமல் பிறர் தாமாகச் சொல்வதைக் கேட்டல்.

கேளாமற் கேட்கும் இடங்கள் பேச்சு மேடை, இசையரங்கு, நாடகக் கொட்டகை, நிழற்படக் கொட்டகை, இரயில் நிலையம், ஆற்றங்கரை, குளத்தங்கரை, தண்ணீர்க் குழாய் முதலியன.

கேளாமற் கேட்கும் வாய்ப்பை இயல்பாகப் பெற்றவர்கள் வண்டியோட்டிகளே. மாடு, குதிரை, ரிக்சா, மோட்டார் வண்டிகளிற் பயணஞ் செய்வோர் வண்டியோட்டி ஒருவன் இருப்பதாகக்கூட எண்ணாமல், தாங்கள் மட்டுமே தனித்து இருப்பதாக நினைத்துப் பேசக்கூடாதவைகளை யெல்லாம் பேசிக் கொண்டே போவார்கள். வண்டியோட்டிகளுக்குத் தெரியாத செய்தி ஊரில் எதுவுமேயிராது! இந்த வண்டி யோட்டிகள் மற்றவர்களைவிடத் திறமைசாலிகளாகக் காணப்படுவது இதன் பொருட்டேயாம். இங்கிலாந்தில் ஒரு வண்டியோட்டி சிறந்த எழுத்தாளனாக மாறிப் பெரும் பொருள் திரட்டி விட்டானாம். அவன் முதலில் எழுதி வெளி யிட்ட நூலின் பெயர் என்ன தெரியுமா? "என் காதில் விழுந்தவை" என்பதே. அவனைப் பொறுத்தமட்டில் கேள்வி அவனுக்குச் செல்வமாகவே மாறிவிட்டது.

ஆகவே, நீ கேளாமற் கேட்கும் செல்வத்தையே பெருநிதி யாகப் பெறு. நீயாக எதையும் அவசரப்பட்டுக் கேட்டுக் கொண்டிராதே. அவர்களே சொல்லும்படியான ஒரு சூழ் நிலையை உண்டாக்கு. அப்போதும் அவர்கள் சொல்லு

வில்லையானால் சிறிது பொறுத்திரு. தானாக யாவும் வெளி வந்துவிடும். இரண்டொரு மணித்துளிகளுக்குப் பிறகு அறியக் கூடியதை முன்னதாக அறியத் துடிதுடித்துப் பலரையும் கேட்டுக்கொண்டேயிராதே அது உன் தகுதியைக் குறைத்துக் காட்டிவிடும்.

பல்லாண்டுகளுக்கு முன்பு நான் பயணஞ் செய்து வந்த வண்டியில் பலர் பலவாறு பேசிக்கொண்டே வந்தார்கள். சிலர் சில கேள்விகளைக் கேட்டுக் கொண்டே வந்தார்கள். அவை ஒவ்வொன்றும் அவரவர் தகுதியைக் காட்டிக் கொண்டே இருந்தன. நான் மிகப் பொறுமையாக அவர்களின் அறிவுக்குப் புள்ளி போட்டுக் கொண்டேயிருந்தேன். ஏன் நீங்கள் கூட எளிதாகப் போடலாம் அவர்களின் கேள்விகளும் இவை தான்...

"வரியெல்லாம் இன்னமே இருக்காது இங்கிறாங்களே, நிசமாங்க?"

"மணி அடிச்சாத்தான் வண்டி வருமுங்கிறாங்களே, எப்படிங்கோ?"

இப்படி இவர்கள் கேளாதிருந்தால், அவர்களது அறிவிற்குப் புள்ளிபோட நம்மால் இயலுமா? அவர்களது கேள்விகள் தானே அவர்களது அறிவை நமக்குக் காட்டிக் கொடுத்தது. அந்த வண்டியிலேயே எதுவும் பேசாமல் பயணம் செய்து வந்தவர்கள் இருவர். வண்டி நின்றதும் அவர்களில் ஒருவரை அணுகி, "ஐயா, தாங்கள் எந்த ஊர்? என்ன வேலை? எங்குச் செல்லுகிறீர்கள்?" என அன்பாகக் கேட்டேன். அதற்கு அவரிடமிருந்து புன்சிரிப்பு மட்டுமே வெளி வந்தது. நான் அவரது அறிவுக்கு 100 புள்ளிகள் குறித்துக்கொண்டு மிகவும் மரியாதையுடன், "நீங்கள் தமிழகத்திற்கு ஒரு வழிகாட்டி, மிகவும் நன்றி" எனக்

கூறிக் கொண்டிருந்தேன். உடனே பக்கத்தில் இருந்தவர் "ஏய்யா இந்தத் தொந்தரவு? பேசாம ஊருக்குப் போய்ச் சேருங்கய்யா. அவர் ஊமை" என்றார். அவர் எனது அறிவுக்கு எத்தனை புள்ளி போட்டிருப்பாரோ தெரியாது. ஆனால், எனது அறிவுக்கு என்னால் ஒரு புள்ளியும் போட முடியவில்லை. நானும் இக்கேள்விகளைக் கேளாமல் பயணம் செய்திருக்கக் கூடாதா? என எண்ணி வெட்கினேன்.

கேள்வி கேட்பதற்கு மட்டுமல்ல, கேட்பவர்களுக்கு விடை அளிப்பதற்குக்கூட பொறுமை வேண்டும். விடை கூறுமுன் விழிப்பாகவும், விடை கூறுவது சுருக்கமாகவும் இருக்க வேண்டும். செல்வத்தைச் சேமித்து வைப்பது போல, சில பெரியவர்கள் அறிவையும் அனுபவத்தையும் சேமித்து வைத்திருப்பார்கள். அவற்றைப் பெற விரும்பி வருபவர் களுக்குத் தகுதியறிந்து அளவோடு சிறிது வழங்குவது "கொடைத்தன்மை" எனவும், அதையும் வழங்க மறுப்பது "கருமித்தனம்" எனவும் கருதப்பெறும் ஆனால், அந்த விடை எவருக்கும் தீமை பயவாததாக இருத்தல் வேண்டும்.

ஒருவன் உன்னிடம் வந்து, "அவன் பணம் தர மறுக் கிறான். கோர்ட்டில் வழக்குப் போடலாமா?" என ஒரு கேள்வி கேட்பான். போடு என்றாலும், வேண்டாம் என்றாலும் இரண்டு விதமான துன்பங்கள் வந்து சேரும். அதுவும் அவனிடமிருந்தும், அவனது எதிரியிடமிருந்தும் பல உரு வெடுத்து வரும். இறுதியில் அவைகளை எதிர்த்துப் போராட வேண்டிய நிலை உனக்கே ஏற்பட்டுவிடும். ஆகவே, இப்படிப் பட்ட சமயங்களில் உனது விடை "நன்றாக யோசித்துச் செய்யுங்கள்" என்றிருப்பது நன்மை பயப்பதாக விருக்கும்.

கேள்விகளுக்கு விடையளிப்பதில் வக்கீல்களும் டாக்டர்களும் மிகுந்த விழிப்பாக இருத்தல் வேண்டும். அவர்களுக்கு உண்மை தெளிவாகத் தெரிந்திருந்தாலும், அவற்றை வெளிப்படையாகக் கூறாமல் சிறிது சுற்றி வளைத்துக் கூறுவதே நலமாகவிருக்கும். "உயிர் போய் விடும்" எனக் கூறிய கேஸ்கள் பிழைத்துக் கொண்டதால் கெட்டுப்போன டாக்டர்களும், "தோற்றுப் போகும்" எனக் கூறிய கேஸ்கள் வெற்றிபெற்றதால் அழிந்து போன வழக்கறிஞர்களும் பலருண்டு.

கேள்வி கேட்டு அறிவதைவிட, கேளாமற் கேட்டு அறிவதைவிட, கேள்விக்கு விடை கூறுவதைவிட, எதையும் எவரிடமும் பேசாமலிருக்கப் பழகிக் கொள்வதே மிகவும் நல்லதாகும். ஏனெனில், குறைவாகப் பேசுகிறவர்களையே அறிவாளிகள் விரும்புகிறார்கள். அதுமட்டுமல்ல, இன்றைய தினம் உயர்ந்த அறிஞர்களாகவும், சிறந்த செயலாளர்களாகவும் உள்ள தலைவர்ளெல்லாம், குறைந்த பேச்சு உடையவர்களாகவே காணப் படுகிறார்கள்.

வாய்க்கு இரண்டைக் கதவுகள் இருப்பது ஏன் தெரியுமா? எப்போதும் மூடி வைப்பதற்கு. காதுகளுக்குக் கதவுகளே இல்லாமல் இருப்பது ஏன் தெரியுமா? எப்போதும் கேட்டுக் கொண்டிருப்பதற்கு! வாய் ஒன்றும், காது இரண்டுமாக அமைந்திருப்பது ஏன் தெரியுமா? குறைவாகப் பேசு, அதிகமாகக் கேள் என்பதற்கு!

காதுக்கும் வாய்க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வாய் நல்லதைச் சொல்ல வேண்டுமானால், காது நல்லதைக் கேட்டிருக்கவேண்டும். வாய் வணக்கமாக இன்னுரைகளைக் கூற வேண்டுமானால், காது இணக்கமாக நல்லுரைகளைக் கேட்டிருக்க வேண்டும். அதிகம் கூறுவானேன், காதால்

கேட்க முடியாத போது வாயால் பேசவே முடியாது எனக் கூறிவிடலாம்.

ஆகவே, கேள்விச் செல்வத்தைப் பெறு; அதையும் கேளாமற் கேட்டுப் பெறு. கேட்டுத்தான் பெறவேண்டும் என்ற நிலை வந்துவிட்டால் மெதுவாகக் கேள். அதையும் கற்றறிந்த மக்களிடம் மட்டுமே கேள். அதிலும் ஒழுக்க முடையவர்களிடம் மட்டுமே கேள். அவர்களிடமிருந்து வருகின்ற விடையானது, சேற்று நிலத்திலே வழுக்கி வழுக்கி நடக்கின்றவனுக்கு ஊன்றுகோல் துணை செய்வதுபோல, உன் வாழ்க்கைப் பாதையில் வழுக்காது நடக்க உயர்ந்த தோர் ஊன்று கோலாக நின்று உதவும்.

எப்பொழுதும் நல்லவைகளைக் கேள்; அல்லது எவ்வளவாவது நல்லவைகளைக் கேள். அவ்வளவு உனக்குச் சிறப்பும், உயர்வும் உண்டு. "எனைத்தானும் நல்லவை கேட்க" என்ற குறளை எப்போதும் சொல்லிக் கொண்டிரு.

வாழட்டும் தமிழகம்!
வளரட்டும் தமிழினம்!

# 3 அருட் செல்வம்

செல்வம் இருவகை. ஒருவகை கண்ணாற் கண்டு மகிழ்வது. மறுவகை மனத்தால் எண்ணி மகிழ்வது. முன்னது நிலம், நீர், பொன், மணி, பொருள் போன்றவை. பின்னது கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், அருள் போன்றவை.

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள

என்பது வள்ளுவர் வாக்கு. "செல்வங்களில் மிக உயர்ந்த செல்வம் அருட் செல்வமேயாம்; ஏனெனில் பொருட் செல்வம் அறிவற்ற கீழ்மக்களிடத்தும் உள்ளது" என்பது இதன் பொருள். அருட் செல்வமானது மேன்மக்களிடத்தில் மட்டுமே காணப்படும் என்பது கருத்து.

அன்பும் அருளும் ஒன்றல்ல, அன்புக்கும் வேறானது அருள். 'அருளொடும் அன்பொடும்' என்ற தொடர் இதனை மெய்ப்பிக்கும் எனவும், அன்புடைமை பற்றிக் கூறிய வள்ளுவர் பின் அருளுடைமை பற்றியும் கூறி யிருப்பதே இதற்குச் சான்றாக அமையும் எனவும் சிலர் கூறுவர்.

அன்பும் அருளும் ஒன்றே. இவை இரண்டும் இரக்கமற்ற உள்ளத்தில் தோன்றுவதில்லை. இவை கருணை என்ற ஒரே பொருளைக் குறிப்பன என்பர் வேறு சிலர்.

மேற்கண்ட இரு கூற்றுக்களிலும் உண்மை இல்லாமல் இல்லை. அன்பும் அருளும் உண்மையில் வேறாக இருந்தும், அவை ஒன்று போலவே காட்சியளிக்கின்றன.

அன்பு என்பதும் அருள் என்பதும் மக்கள் உள்ளத்தே இளகி விளையும் ஒன்றேயாம். எனினும் அவை இடவேறுபாட்டாலும் நிலை வேறுபாட்டாலும் தகுதி வேறுபாட்டாலும் பெயர் வேறுபடுகின்றன. விளக்கம் கூறவேண்டுமானால், தொடர்புடையாரிடத்துத் தோன்றுவது அன்பு எனவும், பிறிடத்துத் தோன்றுவது அருள் எனவும், சிறியோரிடத்து விளைவது அன்பெனவும், பெரியோரிடத்து விளைவது அருள் எனவும், இல்லறத்தில் காணப்படுவது அன்பெனவும், துறவறத்தில் காணப்படுவது அருள் எனவும் கூறலாம். இதனையே அன்பு நெறி என்றும் அருள்நெறி என்றும் கூறுவர். திருக்குறளில் அன்பு 24 இடங்களிலும், அருள் 18 இடங்களிலும் காணப்படுகின்றன. அன்பு பற்றுதலையும், அருள் இரக்கத்தையும் குறிக்கும். அன்பை மனிதத் தன்மையின் மீதும், அருளைத் தெய்வத் தன்மையின் மீதும் ஏற்றிக் கூறுவதுண்டு.

இறைவனிடத்திலிருந்து மக்கள் வேண்டுவது அன்பு அல்ல; அருளையே. அது பேரருளாகவும் பெருங்கருணையாகவும் காட்சியளிக்கும். இதனை "அருட் பெருஞ் ஜோதி தனிப்பெருங் கருணை" என்ற வள்ளலாரின் வாக்கு மெய்ப்பிக்கும். அவர் கண்டுகொண்ட தெய்வம் "பேரருள் ஒளி", "பெருங்கருணை வடிவு" என்பது இதன் பொருள்.

ஒருவரையொருவர் அடித்துத் துன்புறுத்துவது விலங்குக் குணம். தன்னலம் கொண்டு உயர்ந்து செல்வது பறவைக் குணம். தீமை செய்தவர்க்குத் தீமை செய்வது தேள், பாம்புக் குணம். தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய்க்குணம். தீமை செய்தவனை மன்னித்து அதை மறந்து அவனுக்கு எவ்விதத் தீமையும் செய்யாதிருப்பதே மனித குணம் இவற்றையெல்லாம் கடந்து தீமை செய்தவர்க்கும் நன்மை செய்வதே தெய்வ குணம் என்றாகும். இந்தக் குணமே அருட் செல்வம் எனப்பெறும்.

பொருட் செல்வம் பெறுவது அரிது. அருட் செல்வம் பெறுவது எளிது. பொருட்செல்வம் பெறப் பல ஆண்டுகள் வேண்டும். அருட்செல்வம் பெறச் சில வினாடிகளே போதும். பொருட்செல்வம் உழைத்துப் பெறுவது. அருட் செல்வம் நினைத்துப் பெறுவது. பொருட் செல்வம் கையால் எண்ணிப் பெறவேண்டிய ஒன்று. அருட் செல்வம் மனத்தால் எண்ணிப் பெறவேண்டிய ஒன்று. ஆகவே தம்பி! நீ அருட் செல்வத்தைப் பெற விரும்பு! அதைப் பெற்று அருட்செல்வனாக விளங்க ஆசைப்படு! மிக எளிதாகப் பெறக்கூடிய இவ்வுயர்ந்த செல்வத்தை நீ ஒருபோதும் இழந்துவிடாதே.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதும், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதும், "எவ்வுயிரும் பராபரனின் சந்நிதியாகும்" என்பதும் நமது முன்னோர்களின் வாக்கு. ஆகவே பிறரை உன்னைப் போன்று நினை! அவர்களை வாழவைத்து வாழ்! அவர்கள் வாழ்வதற்காகவே வாழ்!

உன்னைப்போன்ற மக்களை உடன்பிறந்தவர்களாகக் கருது. ஜாதி கருதி, பிறப்பினால் உயர்வு தாழ்வுகளை

எண்ணி வெறுத்து ஒதுக்காதே! ஒதுக்கினால் நீ அருட் செல்வத்தை இழந்துவிடுவாய்.

மக்களாகப் பிறந்தவர்களில் வறுமையாளரே பெரும் பான்மையோர். அவர்களிற் பலர் நீ வாழும் நாட்டில், ஊரில், தெருவில், அருகில் இருப்பவர்கள் அவர்களை ஏழைகள் என்றெண்ணிக் குறைவாக மதித்து எள்ளி நகையாடாதே. அவர்களிலும் நீ உயர்ந்தவன் என எப்போதும் நினையாதே. நினைத்து விட்டால் அப்போதே உன்னை அருட்செல்வம் இழந்துவிடும்.

அறிவால், ஆற்றலால், உடலால், வலிமையால், பொரு ளால், பிறவற்றால் உன்னைவிட மெலிந்தவர்களைத் தாக்காதே! தாக்கும் நிலை வந்தால் உன்னைவிட வலிமை வாய்ந்தவர்கள் உன்னைத் தாக்க வருவதாக நினை. அப்போது உன் மனம் என்ன பாடுபடுமோ அதனையே அந்த ஏழ்மை மனமும் படும் என நினை. உடனே அருட் செல்வத்தைப் பெறுவாய். இன்றேல் அதை நீ இழந்து விடுவாய்!

துன்பப்படுகிறவர்களைக் கண்டால் விலகிப் போய் விடாதே! நெருங்கு! அவர்கட்கு உன்னால் என்ன செய்ய முடியும் என்பதை எண்ணிப் பார்! உடலாலோ, பொரு ளாலோ, சொல்லாலோ உதவிசெய்ய முடியுமானால் துணிந்து செய்! விரைந்து செய்! முடிந்தவரை செய்! உன்னால் முடியாதிருக்குமானால் அதற்காக வருந்தி ஒரு சொட்டுக் கண்ணீராவது விடு. உள்ளத்தில் அருட்செல்வம் பிறக்கும்! முகத்தில் அருள் ஒளி வீசும்! நீ அருட்செல்வ னாகத் திகழ்வாய்!

யாரோ, எவரோ ஒருவர் வண்டியில் அடிபட்டுக் கிடக் கிறார் என்று வழிநெடுகச் சொல்லிக் கொண்டு போகாதே! அடிபட்டுக் கிடப்பவரை உன் உறவினனாக உடன்பிறந்தவ

னாக, அல்ல நீயே அடிபட்டுக் கிடப்பதாக எண்ணு! அப்போது உனக்கு என்னென்ன உதவிகள் தேவை என்பது புலப்படும். அதை உடனே செய். நீ அவர்களை வருந்தித் தழுவு! அருட்செல்வம் உன்னை மகிழ்ந்து தழுவும்.

சொற்களில் தீச்சொல், சுடுசொல். கடுஞ்சொல், கொடுஞ்சொல் எனப் பலவகையுண்டு, அவைகளைச் சொல்வதற்காகத்தான் நாக்குப் படைக்கப் பெற்றிருக்கிறது என நினைத்துவிடாதே! அதனால் கடுமையும், கொடுமையும், தீமையும் விளையுமேயன்றி நன்மை விளைவதில்லை. இவ்வுண்மையை அச்சொற்களின் பெயர்களே சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கின்றன! இத் தீச்சொற்களை எளியவரிடத்தும், வலியவரிடத்தும் சொல்லாதிருப்பது நல்லது. "இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாது" என்பது நல்லறிஞர்களது வாக்கு. கடப்பாரைக்குப் பிளவுபடாத கருங்கற்பாறை பசுமரத்தின் வேருக்குப் பிளவுபட்டுவிடும் என்பது நாம் கண்டுவரும் உண்மை. வெற்றி தீச்சொல்லில் இல்லை; தீஞ்சொல்லில் உள்ளது. தீச்சொல் அருட் செல்வத்தை அழிக்கும்; தீஞ்சொல் அருட் செல்வத்தை அளிக்கும்.

வேட்டையாடுதல் சிலருக்குப் பொழுது போக்கு. ஆனால் விலங்குகளுக்கோ அது உயிர்ப்போக்கு. சிலர் இதை வீரம் என்பர். துப்பாக்கி கொண்டு, அதுவும் தூரத்தில் மறைந்து நின்று சுடுகிறவர்களைக் கண்டால் வீரம் தொலை தூரத்தில் போய் நின்று நகைக்கும். சில சமயம் எதிரில் வந்தும் பழிக்கும். மடியில் பால்சுரக்க மனத்தில் குட்டியை நினைத்து ஓடுகின்ற மானைச் சுட்டு வீழ்த்த எண்ணும் மனம் நன்மனமல்ல. அது கல்மனம். உள்ளத்திலே குஞ்சை நினைந்து வாயிலே இரையைக் கவ்வி விண்ணிலே பறந்து செல்லும் பறவைகளின் இறகிலே சுட்டு வீழ்த்தப் பார்ப்பவன் கண்களும் கண்களல்ல; அவை புண்கள். அருள் ஒளி

அற்ற கண் கண்ணல்ல; அது புண் எனப்பெறும். நீ இத் தவறைச் செய்து உன் கண்களைப் புண்களாக்கிக் கொள் ளாதே! உன் உயிர் போன்று பிற உயிரையும் நினை! உன் கண்களில் அருள் ஒளி வீசும்!

"ஊனைத் தின்று ஊனை பெருக்காமை முன்னிதே" என்பது இனிது நாற்பதில் ஓர் அடி.

தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்

என்பது திருக்குறளில் ஒரு குறள். உன் சதை பொருகு வதற்காகப் பிற உயிர்களின் சதையைத் தின்பது நல்லதல்ல என்பது கருத்து. ஆட்டின் குடலை, கோழியின் தொடையை, மீனின் தலையைத் தன் முன்னே வைத்து உண்ண வாயைத் திறப்பவன் உள்ளத்தை எப்படி ஆளும் அருள்? ஆளாது. அப்படியே மாளும் அது.

மக்களுக்கும், விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் மட்டுமல்ல, செடி கொடிகளுக்கும் உயிர் உண்டு என்பது மெய்ப்பிக்கப் பெற்றுவிட்டது. வருந்திய முல்லைக் கொடி வாடாமல் படர்வதற்கு ஊர்ந்து சென்ற தேரையே கொடுத்து உளமகிழ்ந்தவன் பாரி. "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்பது அருட்சோதித் தெய்வத்தை ஆண்டுகொண்ட தெய்வமாகக் கொண்ட அருட்பிரகாச வள்ளலின் வாக்கு, பயிரைக் கண்டு வாடிப் பழகிவிட்ட உள்ளம், உயிரைக் கண்டு வாடி உயிர் கொடுக் கவும் முந்தும். ஆம்! வாடிப் பெறுஞ் செல்வமே வளரும் அருஞ் செல்வமாகும்.

இறைவன் "அருள் ஒளியினன். அருள் வடிவினன்." அவன் அருளே கண்ணாகக் கொண்டு கண்டு, "அனருவ

ளாலே அவன்தாள் வணங்கி, "அவனது திருவருளைப் பெற வேண்டும் அதற்கு அன்பு நெறியும் அருள் நெறியும் பெருந் துணை செய்யும்.

ஒருவன் பெற்றுள்ள செல்வங்கள் அனைத்தும் பெருகி வளர்ந்து, பயனுற்று, சிறப்புற்று விளங்க வேண்டுமானால், அவன் அருட்செல்வத்தையும் பெற்றிருக்க வேண்டும் இன்றேல் அவன் எத்தகைய செல்வத்தைப் பெற்றிருப்பினும் அவன் அதனால் பயன் பெறான். கோழையின் கைகளில் வாள் போய்ச் சேராது; சேர்ந்தாலும் கொடியவன் உள்ளத்தில் அருள் போய்ச் சேராது.

வாழ்ந்து பெறும் செல்வம் கிழட்டுச் செல்வம்; ஆழ்ந்து பெறும் செல்வம் சிந்தனைச் செல்வம். நடந்து பெறும் செல்வம் திருச்செல்வம். உழைத்துப்பெறும் செல்வம் உடற்செல்வம். முயன்று பெறும் செல்வம் பொருட் செல்வம். மகிழ்ந்து பெறும் செல்வம் மக்கட் செல்வம். வருந்திப் பெறும் செல்வம் கல்விச் செல்வம். பெற முடியாத செல்வம் தாய்ச் செல்வம். அருட் செல்வமோ உழைக்காமல் வருந்தாமல் நினைத்தே பெறுகின்ற பெருஞ்செல்வமாகும் இதனாலேயே "இது செல்வத்துட் செல்வம்" எனப்பெறுகின்றது. ஆகவே தம்பி! நீ அருட் செல்வத்தை வழங்கி அருட் செல்வனாக விளங்கு!

வாடிய பயிரைக் கண்டு வாடிய உள்ளம் அன்றே
தேடிய செல்வம் ஒன்று அதுதிரு அருளாம் செல்வம்

வாழட்டும் தமிழகம்!

# 4. பொருட் செல்வம்

செல்வம் பலவகை. அவை கல்வி, கேள்வி, அறிவு, அருள், பொருள் முதலியன. அவற்றிலுள்ள பொருளும் பலவகை. அவை பொன், மணி, முத்து, பவளம், பணம் முதலியன. அவற்றிலுள்ள பணமும் பலவகை. அவை செம்பு, ஈயம், வெள்ளி, பவுன், நோட் முதலியன. இவையே பொருட் செல்வம் எனப்பெறும்.

வாழ்வுக்குப் பொருள் தேவை. பொருளற்ற வாழ்வு வாழ்வாகாது. "அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகமும் பொருளில்லாதவர்க்கு இவ்வுலகமும் இல்லை" என்பது வள்ளுவர் வாக்கு. எவராலும் பொருட்படுத்த முடியாத ஒருவர் எல்லோராலும் பொருட்படுத்தப் பெறவேண்டுமானால், அவர் பொருளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதும் அவரது கருத்து.

பொருளைத் தேடுவதும், தனக்காக என்றில்லாமல், பிறருக்காகவும் என்று தேடவேண்டும். அதையும் நல்லவழியில் தேடி, நல்ல வழியில் செலவிட்டு, நல்ல முறையில் வாழ்ந்தாக வேண்டும். பிறர்க்குப் பயன்படும் மக்கள் உள்ளூரில் பழுத்த கனிமரத்தை ஒப்பாவார். அல்லாதவர் பழுத்தும் பயன்படா எட்டி மரமேயாவர். ஆம், எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?

"பொருளற்ற மக்கள் பொருள் பெற்ற மக்களிடம் சென்று இரப்பது இழிவு. இல்லை என்று வருகிற அவர்களிடம் 'இல்லை' என்று கூறுவது அதைவிட 'இழிவு' என்பது தமிழகத்தின் பண்பு.

ஒரு இடுகாட்டில் ஒரே நேரத்தில் இரு பிணங்கள் எரிந்து கொண்டிருந்தன. அதைக் கண்ட ஒரு பெரியவர், "இவர் ஈத்துவக்கும் இன்பம் இன்னது என அறிந்து சுவைத்த செல்வர். இவர் அவ்வின்பம் எப்படி இருக்கும் என்பதையே அறியாது வைத்து இறந்த வறுமையாளர்" என்றார். யாவும்! பணம் இழந்த பிணம்!

தமிழ்ச்சொற்கள் அனைத்தும் பொருளமைதியுடையன. "சுறுசுறுப்பு" என்பதும் "படபடப்பு" என்பதும் ஒன்றல்ல. அருஞ் செயல்களைப் பொழுதை வீணாக்காமல் அமைதியாகச் செய்து முடிப்பவனே சுறுசுறுப்பாளன். அதிகமாய்த் துடித்து எதையும் செய்ய இயலாமல் துன்பப்படுகிறவன் படபடப்புக்காரன். "சிக்கனம்" என்பதும் "கருமித்தனம்" என்பதும் இது போன்றதே. தேவைக்குமேல் செலவு செய்வது "வீண் செலவு" தேவையின் அளவு செலவு செய்வது "சிக்கனம்." தேவைக்கும் செலவு செய்யாதது "கருமித்தனம்" இவற்றில் பொருட் செல்வம் பெறத் தேவையானது "சிக்கனம்" ஒன்றே.

மாதம் 100 ரூபா வருமானம் உள்ளவர்கள் வீட்டு வாடகை ரூபா 10. அரிசி ரூபா 15, பலசரக்கு ரூபா 15, காய்கறி ரூபா 8, பால் ரூபா 8. பலகாரம் ரூபா 8, எண்ணெய் ரூபா 5, விறகு ரூபா 5 வரட்டி ரூபா 2, விளக்கு ரூபா 2, துணி துவைக்க ரூ. 3, சவரம் ரூபா 2, துணிக்காக ரூபா 5, இதர செலவுக்காக ரூபா 7, மீதம் ரூபா 5 எனத் திட்டமிட்டுச் செவவு செய்யவேண்டும் திட்டமில்லாத குடித்தனமும்

குறிக்கோளில்லாத வாழ்க்கையும் ஒருபோதும் சீரடையாது. சிலர் இத்திட்டத்தையே தங்கள் இருப்பிடத்துக்கு ஏற்ற வாறும் குடும்பத்திற்கு ஏற்றவாறும் மாற்றியமைத்துக் கொள்ளலாம். திட்டமிட்டு வாழ்கை நடத்துகிறவர்கள் மீதப்படுத்த முடியாமற் போனாலும், கடன்காரர்களாக வாழமாட்டார்கள் என்பது உறுதியாகும்.

ஒருவனுக்குப் பொருள் வந்துசேருவது திடீரென வந்து விடாது. சிறுகச் சிறுக வந்து, பின் பெருஞ்செல்வமாகக் காட்சியளிக்கும். போகும்போது சிறுகச் சிறுகப் போகாது; ஒரேயடியாய்த் திடீரெனத் தொலைந்து போய்விடும்—ஒரு நாடகக் கொட்டகைக்கு மக்கள் ஒவ்வொருவராக வந்து, பெருங் கூட்டமாகக் காட்சியளித்துப் பின் ஒரேயடியாய்க் கலைத்து ஒழிந்து போய் விடுவதைப்போல.

பொருட் செல்வம் பெற விரும்புகிறவர்களுக்குச் "சிக்கனமும்", "சேமிப்பும்" மட்டும் போதாது. அவர்கள் சேமித்த செல்வத்தைப் பாதுகாத்தும் ஆகவேண்டும். சேமிப்பு ஒரு கலை. சிக்கனம் அதன் துணைக்கலை. பாதுகாப்பதோர் பெருங்கலை.

பல ஆண்டுகள் சேர்த்த செல்வத்தைப் பாதுகாக்கத் தெரியாமல் இழந்துவிட்டவர் பலர். இவர்களிற் பெரும் பான்மையோர் நீண்டகாலம் உழைத்து, ஓய்வுபெற்று, உதவிநிதி பெற்றோர். உலகம் இன்னது என அறியாமல் உத்தியோகத்திலேயே உழன்று வாழ்ந்து வந்தவர்கள். உலகம் இன்னது என நன்கறிந்த வஞ்சக மக்களின் சொற் களில் ஏமாந்துவிடுவது இயல்பேயாகும். உதவி நிதி பெற்றோர் தாம் வாங்கிய தொகை அனைத்தையும் அன்றே ஒரு பெரிய வங்கியிற் போட்டு வைத்துப் பின் அத் தொகையை 5 பங்குகளாகப் பிரித்து 2 பங்கிற்கு வீடும்,

ஒரு பங்குக்கு நிலமும், 1 பங்குக்கு ஆலைப் பங்குகளும் நல்லவைகளாகப் பார்த்து வாங்கி வைப்பதுடன், மீதியுள்ள ஒரு பங்குப் பணத்தில் அரைப் பங்கு ரொக்கமாகவும், அரைப் பங்கு தங்கமாகவும் வைத்திருந்து பாதுகாப்பதே சிறந்த கலையாகும். வாங்கிய தொகை 25 ஆயிரமாக இருந்தால், இது 10, 5, 5, 2½, 2½ எனப் பிரியும்.

வியாபாரியாகவோ, தொழில் துறையினராகவோ இருந்தால், அவர் தம்மிடம் உள்ள தொகையை 10 பங்குகளாகப் பிரித்து, 5 பங்கை தொழிலிலும், இரண்டுபங்கை வீடுகளிலும், ஒரு பங்கை நிலத்திலும், ஒரு பங்கைப் பாங்குகளிலும், அரைப் பங்கைத் தங்கத்திலும் போட்டு; அரைப்பங்கை ரொக்கமாகவும் வைத்திருக்க வேண்டும். அவருடைய மூலதனம் 100 ஆயிரமாக இருந்தால் அது 50,20,10,10, 5, 5 எனப் பிரியும். கம்பெனியின் பங்குள்ள எல்லாவற்றையும் ஒரு துறையிலேயே வாங்கிவிடாமல், பாங்க், நூல், சர்க்கரை, துணி, தோட்டம், இயந்திரம் ஆகிய பலதுறைப் பங்குகளாகவும் பார்த்து வாங்கி வைப்பது நலமாகும். இம்முறையானது வஞ்சக மக்களிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள மட்டுமல்லாமல்; ஒரு திடமான கொள்கையில்லாத மக்களால் ஆட்சி செய்யப் பெறுகிற அரசாங்கத்தின் போக்குகளிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ள உதவும். ஒரு துறை தாழ்த்தி விட்டாலும், மற்றொரு துறை உயர்த்திவிடும். எந்த முறையிற் பார்த்தாலும் இதைவிடச் சிறந்த பாதுகாப்புக் கலை இப்போது இல்லை.

திடீரென வருமானம் குறைந்துவிட்டால் அல்லது தடைப்பட்டுவிட்டால் எவரும் வருத்தப்பட வேண்டியதில்லை. வருந்தியும் பயன் இல்லை. அவர்கள் உடனே செய்யவேண்டியது செலவினத்தைக் குறைத்துக் கொள்வது தான். ஒரு குளத்திற்குத் தண்ணீர் வரும் வழி அடைப்பட்டுப்

போனால், அக்குளத்தின் வடிகாலை உடனே மூடவேண்டியது தான் சிறந்த வழி. வரவே சிறுத்துச் செலவே பெருத்தால் அதுவே அழிக்கும் அவனை.

ஒருவன், வருகிற வருமானத்திலும் தனக்கு செலவிலும், சேமிப்பிலும் பாதுகாப்பிலும் செலுத்துகிற கருத்தைவிட, தான் சார்ந்திருக்கிற ஒரு பொது அமைப்பிற்கு வருகிற வருமானத்திலும் செலவிலும், சேமிப்பிலும் பாதுகாப்பிலும் அதிகமாகக் கருத்தைச் செலவிட்டாக வேண்டும். இன்றேல் பழி தாங்கமுடியாத அளவிற்கு வந்துவிடும். அத்தகைய மக்கள் பொது வாழ்வில் தோன்றுவதைவிடத் தோன்றா திருப்பதே நல்லது.

ஒரு தனி மனிதன் தவறான வழியில் பொருள் சேர்க்க எண்ணிவிடக் கூடாது. ஏனெனில், அழ அழக்கொண்ட அது அழ அழப் போய்விடும். அவ்வாறே ஒரு அமைப்பு பொது மக்களைத் துன்புறுத்திப் பொருள் சேர்க்க எண்ணிவிடக் கூடாது. ஏனெனில் ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளாக மாறிவிடும். பின் இது எவ்வளவு பெரிய அமைப்பாக இருந் தாலும் அழிந்தொழிந்து போய்விடும்.

பொது வாழ்வில் ஈடுபடுகிறவர்களுக்கு உயர்ந்த மனப் பான்மையும், உறுதியான கொள்கையும் தேவை, சொந்த உழைப்பினால் வரும் வருமானத்தில் உண்டு வாழும் மக்களே பொது வாழ்விற்குத் தேவை. பொது வாழ்விலேயே வயிறு கழுவி வாழும் மக்களைக்கொண்ட நாடு ஒருபொழுதும் வாழாது. ஆகவே ஒருவனுக்கு தன் வாழ்விற்காகவும், பொது வாழ்விற்காகவும் பொருட் செல்வம் கட்டாயம் தேவை. தனிப்பட்டவர்க்குத் தேவைப்படுவது போலவே, ஒரு நாட்டிற்கும் பொருளாதாரம் தேவை.

பொருளாதாரக் கொள்கைகளைப் பித்தலாட்டக் கொள்கைகள் எனச் சிலர் கூறுவதுண்டு. அது தவறு. அவ்வாறு குறை கூறப்படுவதற்குரிய காரணங்கள் இரண்டு. ஒன்று பொது மக்களுக்கு இன்னதென்றே விளங்காதது. மற்றொன்று பொருளாதாரப் பேரறிஞர்களிடமிருந்தே மாறுபட்ட கருத்துக்கள் வந்துகொண்டிருப்பது.

பழங்காலத்து மக்களுக்குப் பணம் தேவையில்லா திருந்தது. அவர்கள் தம்மிடம் உள்ள பொருள்களைக் கொடுத்துத் தேவைப்படும் பொருள்களை வாங்கிவந்தனர். இதற்குப் பண்டமாற்று முறை எனப் பெயர். காலப்போக்கில் நம்மிடம் உள்ள பொருள்களைத் தேவைப் படாத பொருள் களுக்கும் விற்கவேண்டி வந்ததால், பொருள்களின் அளவு கருவியாக எல்லோருக்கும் தேவைப்படும் ஒரு பொருள் நிற்க வேண்டி வந்தது. முதலில் நின்றது நெல்; அடுத்து நின்றவை ஆடு மாடுகள்; பின் இரும்பு செம்பு முதலியவை; இறுதியாகப் பொருட் செல்வத்தின் அளவு கருவியாக நின்றவை பொன்னும் வெள்ளியும். இப்போது அதுவும் மாறிக் கலப்பட உலோகமும் காகிதமுமே அளவு கருவியாக நிற்கின்றன.

ஈயப்பணமும், காகிதப் பணமும் வெளிமதிப்பு உள்ளவையே. அவற்றின் உள்மதிப்பு மிகக்குறைவு. அவை தன் மதிப்பினால் செல்லுபடியாவதில்லை. அரசாங்க முத்திரையினால் செல்லுபடியாகிக் கொண்டிருக்கின்றன! இப்போது தன் மதிப்பினால் செல்லுபடியாகிக் கொண் டிருக்கும் ஒரே நாணயம் ஒற்றைக் காசுதான். அதன் உள்மதிப்பும் வெளிமதிப்பும் ஒன்றே. முன் வெள்ளியிலும் தங்கத்திலும் அச்சிடப்பெற்ற நாணயங்களின் உள்

மதிப்பும் வெளி மதிப்பும் ஒன்றாகவே இருந்தன. காகிதப் பணம் அப்படியல்ல. அது பெருகப் பெருக அதன் மதிப்புக் குறையும். மதிப்புக் குறையக் குறைய ஒரு பொருளுக்கு அதிகக் காகிதப் பணம் கொடுக்கவேண்டி வரும். அதைக் காண்பவர் பொருள்களின் விலை ஏறி விட்டதாகக் கூறுவர். இது தவறான கருத்து.

உண்மை என்னவெனில் 1931 முதல் இன்றுவரை கடந்த 30 ஆண்டுகளாக எந்தப் பொருளும் விலை ஏறவில்லை என்பதே. அன்றைக்கும் பவுனுக்கு 3 மூட்டை நெல். இன்றைக்கும் பவுனுக்கு 3 மூட்டை நெல். பவுன் 15 ரூபாயாக இருந்தபோது நெல் மூட்டை 5 ரூபாயாக இருந்தது. பின் பவுன் 30 ரூபாய் ஆனபோது நெல் ரூபா 10. பவுன் 45 ரூபா ஆனதும் நெல் ரூபாய் 15. பவுன் 60 ரூபாய் ஆனதும் நெல் ரூபாய் 20இப்போது பவுன் 90ஆனதும் நெல்ரூபா 30 பவுனுக்கு மூன்று மூட்டை நெல் அன்றும் விற்றது: இன்றும் விற்கிறது; இனியும் விற்கும்.

ஓர் ஏக்கர் நிலம் உள்ள உழவன் தன் நிலத்தில் 30 மூட்டை நெல் விளைவித்து 15 மூட்டையைத் தன் செலவிற்கு வைத்துக்கொண்டு, மீதி 15 மூட்டை நெல்லை விற்று எல்லாப் பொருள்களையும் அன்றும் வாங்கினான், இன்றும் வாங்குகிறான். எது விலை ஏறியது? நெல்லையோ தங்கத்தையோ இணைத்துப் பார்க்கும்போது எப்பொருளும் விலை ஏறியதாகத் தெரியாது. காகிதப் பணத்துடன் இணைக்கும் போதுதான் எல்லாப் பொருளும் விலை ஏறியதாகத் தோன்றும். இது பொய்த் தோற்றம். உண்மை என்னவெனில் காகிதப் பணத்தின் மதிப்பு குறைந்து விட்டது என்பதே. அன்று நமது நாட்டில் 150 கோடி

ரூபாய்க்குத் தங்கம் இருக்க, 300 கோடி ரூபாய்க்குக் காகிதப் பணம் இருந்து வந்தது. இன்று அதே தங்கத்திற்கு 2100 கோடி காகிதப் பணம் இருந்து வருகிறது. காகிதப் பணம் 1க்கு 8 ஆகப் பெருகிவிட்டதால் ஒரு காசுப் பொருளுக்கு 7 காசும், 1 அணாவுக்கு 7 அணாவும், 1ரூபாய்க்கு 7 ரூபாய் காகிதமும் கொடுக்கவேண்டியிருக்கிறது.

ஒரு நாட்டின் காகிதப் பணம் வெளிநாட்டில் செல்லாது. பிறநாடுகளிலிருந்து சாமான்களை வாங்கினால் தங்கமாகவே கொடுக்க வேண்டும். தங்கம் குறைவாக உள்ள நாடுகள் தம் நாட்டில் விளைந்த அல்லது செய்த பொருள்களைக் கொடுத்து வரும் இது ஏறத்தாழப் பண்டமாற்று முறை போன்றதேயாகும். இறக்குமதியைக் கட்டுப்படுத்தி ஏற்றுமதியை விரிவுபடுத்தும் நாடுதான் பொருளாதாரத்தில் சிறந்து விளங்கும் என்றாலும் அது உள்நாட்டுத் தேவையையும் நிரப்பி ஆகவேண்டும்.

பொருளாதார அறிவு மேலைநாடுகளிலிருந்து வந்த ஒன்று. அதற்குமுன் நமது நாட்டில் பொருட் செல்வத்தின் மீது பற்றற்ற தன்மையும், அது அவனவன் தலைவிதிப்படி வந்து சேரும் என்ற கொள்கையுமே இருந்துவந்தது ஒரு தனி மனிதனோ, ஒரு நாடோ, தனது அறிவு, ஆற்றல், ஊக்கம் உழைப்பு ஆகியவைகளால் வேண்டிய அளவு பொருட் செல்வத்தைப் பெறமுடியும் என்பதே பொருளாதாரக் கலையின் முடிவாகும்

செல்வங்களில் உயர்ந்தது பொருட் செல்வம். பணம் பத்தும் செய்யும், பணம் பாதாளம் வரை பாயும், பணம் உள்ளான் படைக்கு அஞ்சான், பணம் உடையவர் பலவும்

உடையவர், செல்வரை எல்லோரும் செய்வார் சிறப்பு. ஆகவே பொருளை நல்ல வழியில் தேடு! நல்ல வழியில் செலவிடு! அதிலும் சிக்கனத்தைக் கையாள்! சேமித்து வை! அதையும் பாதுகாத்து வை! இவை அனைத்தையும் எண்ணியே 'பொருள்தனைப் போற்றி வாழ்' என்றார் ஔவையார்.

'பணத்திலே ஆசையொன்றிலேன்' என்பது இராமலிங்க அடிகளின் வாக்கு. ஏன்? பணத்திலே ஆசை வந்துவிட்டால் பிற செல்வரைவிடத் தமது செல்வம் குறைவாகத் தோன்றி உள்ளத்தை வருத்திவிடுமாம். பொருட்செல்வம் உண்மையான செல்வம் ஆவது எப்போது? 'தம்மின் எளியாரை நோக்கித் தமதுடைமை அம்மா பெரிது' என எண்ணி மகிழ்ச்சியடையும்போது.

வாழட்டும் பொருட் செல்வர்!
வளரட்டும் பெருஞ் செல்வம்!

# 5. அறிவுச் செல்வம்

செல்வம் பலவகை. அதில் அறிவு ஒரு வகை எனக் கூறலாம். இதனால், அறிவும் ஒரு செல்வம் என்றாகிறது. இதைவிட "அறிவே செல்வம்" என்பதுதான் பொருத்த மானதாக இருக்கும்.

எச்செல்வமும் இல்லாத ஒருவனிடம் அறிவுச் செல்வம் ஒன்றிருந்துவிட்டால் அவன் எல்லாச் செல்வங்களையும் பெற்றவனாவான். எல்லாச் செல்வங்களும் பெற்ற ஒருவன் அறிவுச் செல்வத்தைப் பெறாதவனாக இருந்தால், அவன் எல்லாச் செல்வங்களையும் இழந்தவனாகிவிடுவான்.

எந்தச் செல்வத்தையும் உண்டுபண்ணும் ஆற்றல் அறிவுச் செல்வத்திற்கு உண்டு. பிற செல்வங்களுக்கு இந்த ஆற்றல் இல்லை. இதனாலேயே வள்ளுவர் "அறிவுடையார் எல்லாம் உடையார்" எனக் கூறினார்.

செல்வங்கள் அனைத்துமோ, சில செல்வங்கள் மட்டுமோ, அல்லது தனித்த ஒரு செல்வமோ அறிவற்ற மக்களிடத்தில் நில்லாது என்பது வள்ளுவர் கருத்து. இதனை "அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்" என்பதால் நன்கறியலாம்.

பிற செல்வங்களைப் பெற்றவன், தன்னையும் காப் பாற்றிக் கொண்டு அவற்றையும் காப்பாற்றியாக வேண்டும்.

ஆனால் அறிவுச் செல்வமானது தன்னைத்தானே காப்பாற்றிக் கொண்டு தன்னைச் சார்ந்தவனையும் காத்து நிற்கும் ஓர் அருஞ்செல்வமாகும்.

பல செல்வங்கள் காலத்தால் அழியக்கூடியன; சில செல்வங்கள் பகைவரால் அழியக்கூடியன. இன்னும் சில செல்வங்கள் தானே அழிந்துவிடக் கூடியன ஆனால், அறிவுச் செல்வமோ எப்போதும் அழியாததும், எவராலும் அழிக்க முடியாததுமாகும்.

மனம் வேறு, அறிவு வேறு, ''மனமே அறிவு'' என மயங்குவர் சிலர். மனம் மயங்கும், அறிவு மயங்காது. மனம் கலங்கும், அறிவு கலங்காது. மனம் வாய்க்காலில் ஓடும் நீர், அறிவு அதன் இரு கரைகள். மனம் குதிரை அறிவு குதிரை யோட்டி. மனம் குதிக்கும், அறிவு அடக்கும். மனம் ஆசைப் படும். அறிவு அதைத் தடுக்கும், மன்—நினைவு, மனம்—நினைப்பது, மனனம்—நினைத்துக் கொண்டேயிருப்பது. மனிதன்—மனத்தின் வழிச் செல்பவன் என்றாவான். அவ்வாறு செல்லாமல் அறிவு வழிச் செல்பவரே," ''அறிஞர்'' எனப்படுவர்.

அறிவை அறியாதவர் சிலர்; அறிந்தும் அதனை அடையாதவர் சிலர்; அடைந்தும் அதனை வளர்க்காதவர் சிலர்; வளர்த்தும் பயன்படுத்தாதவரோ பலர். இந்த நால் வகையினரையும் ''அறிவிழந்தவர்'' என அறிவைப் பெற்றவர் கூறுவர்.

அறிவை இழந்தவர் மானத்தையும் இழப்பர். அவரை ''உயிர் இழந்த உடல்'' எனக்கூறலாம். கூறிப் பயன்? உயிரிழந்த உடல் அழிந்தொழிந்து போய்விடும். இது அழிந்து ஒழியாமல் அலைந்து திரிந்துகொண்டேயிருக்கும். உயிரிழந்த உடல் காடுகளிற் கிடந்தால் நாய் நரிகளுக் கேனும் உதவும். இது நாட்டின் நடுவிற் கிடந்தாலும்

யாருக்கும் எதற்கும் உதவாது; உயிரிழந்த உடலை அதன் உறவினர்கள் கண்டால் அதனை எரித்தோ, புதைத்தோ அழுது வருந்துவர். ஆனால், இதன் உறவினர்களோ எரிக்காமலும், புதைக்காமலும், அழாமலும் பார்த்துக் கொண்டேயிருப்பர். அதிகம் கூறுவானேன், உயிரிழந்த உடலுக்கு, உற்ற நண்பர்கள் இருந்தால், மலர் மாலை யிட்டுப் போற்றுவர். ஆனால், இதற்கு உற்ற நண்பர்கள் இருந்தால் வெறுத்தே ஒதுக்கிவிடுவர். ஆகவே, அறிவிழந்த மக்களை "உயிரிழந்த உடல்" எனக் கூறுவது ஒருபோதும் பொருந்தாது.

அறிவுடையவர்கள் எத்தகைய மக்களையும் நட்பாக்கிக் கொள்வார்கள். அது மட்டுமல்ல, பெற்ற அந்நட்பைக் குறைத்துக் கொள்ளாமலும், வளர்த்துக் கொள்ளாமலும், ஒரே மாதிரியாக வாழ்ந்து வருவர். அறிவிழந்த மக்களால் இது ஒருபோதும் இயலாது.

அறிவுடையார் கண்ணாற் காண முடியாததையும் காண்பர். காதால் கேட்க முடியாததையும் கேட்பர். அது மட்டுமல்ல, பின்னால் என்ன வரும்? என்ன நேரிடும்? என்பதைக்கூட முன்கூட்டியே அறிவர். அறிவுச் செல்வத்தை இழந்தவர்களால் இது இயலாது

வில் அம்புகளைக் கண்டாலும், வேல் கம்புகளைக் கண்டா லும் அறிவுடையோர் அஞ்சுவதில்லை. எதற்கும் அஞ்சாத இவ்வீரர்கள் பழி பாவங்களைக் கண்டால் பெரிதும் அஞ்சி நடுங்குவர்.

அறிவுடையோர் அதிகமாகப் பேசுவதில்லை. குறை வாகப் பேசினும், எதிரியின் உள்ளத்திற் பதியுமாறு தெளி வாகப் பேசுவர். அதுமட்டுமல்ல; எதிரியின் பேச்சுகளுக்குள்

மறைந்து கிடக்கும் உண்மையையும் எளிதில் அறிவர். அவர்கள் ஏமாறுவதில்லை. எவரையும் ஏமாற்றுவது மில்லை.

உயர்ந்தவர்கள் என்று சொல்வதையெல்லாம் நம்புவதையோ, தாழ்ந்தவர்கள் என்று சொல்வதையெல்லாம் மறுப்பதையோ, நண்பர்கள் என்று சொல்வதையெல்லாம் ஏற்பதையோ, பகைவர்கள் என்று சொல்வதையெல்லாம் வெறுப்பதையோ அறிவுடையவர்களிடம் காணமுடியாது. இந்நால்வரின் சொல்களிலும் காணப்படுகிற உண்மைகளை மட்டும் ஆராய்ந்து வாழ்விற்குப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் அறிவுடையார்க்கு மட்டுமே உண்டு.

கண்ணாற் கண்டவைகளும்கூட அறிவுடையாரிடத்தில் பொய்த்துப் போவதுண்டு. கடலின் ஆழமானவிடத்து நீர் நீலநிறமாகத் தோன்றும். குறைந்த ஆழமுள்ளவிடத்து நீர் பச்சை நிறமாகத் தோன்றும். அலையிலுள்ள நீர் முத்துப் போன்று வெண்மை நிறமாகத் தோன்றும். இரு கைகளிலும் அள்ளிப் பார்த்தால் நிறமற்று விளங்கும். உண்மை என்னவெனில் நீருக்கு நிறமில்லை என்பதே. இதனால் கண்கண்ட உண்மையைக் கூட அறிவு மறுத்தறிவதைக் காணலாம்.

காதாற் கேட்பவைகளும்கூட அறிவுடையாரிடத்தில் பொய்த்துப் போவதுண்டு. சிவாஜிகணேசன் பாட்டு காதில் விழும் நிழற்படத்திற் கண்டதும் கேட்டதும்கூட நினைவிற்கும் வரும் என்றாலும் பாடிய அவரல்ல வேறொருவர் என்பதும், அதுவும் இப்போது கேட்டது சொந்தக் குரலல்ல, ஒலிப்பதிவு என்பதுவுமே உண்மையாக விருக்கும். இதனால் காது கேட்டு அறியும் உண்மையைக்கூட அறிவு மறுத்தறிவதைக் காணலாம்.

சாதி வேற்றுமை கூறுபவர்முன் "ஒன்றே குலம்" என்பவரும், சமயவேற்றுமை கூறுபவர்முன் "ஒருவனே தேவன்" என்பவரும், இடவேற்றுமை கூறுபவர் முன் "யாதும் ஊரே" என்பவரும், இன வேற்றுமை கூறுபவர் முன் "யாவரும் கேளிர்" என்பவரும் அறிவுடையோராகக் காட்சி யளிப்பார்.

அறிவுடையோர் எதனையும் நன்கு ஆராய்ந்த பிறகே செய்யத் தொடங்குவர், அறிவற்றவர் ஆராயாது செய்யத் தொடங்கி விட்டுத் துன்புறுவதோடு பிறகு தமது செயலை எண்ணியும் வருந்துவர்.

அறிவுடையோர் ஒருவர்க்கு வாக்களிப்பதாயின் நன்கு ஆராய்ந்து பின்னரே வாக்களிப்பா. வாக்களித்து விட்டால் உயிர் போவதானாலும் செய்து கொடுப்பர். அறிவற்றோர் ஆராயாது வாக்களித்துவிட்டுப் பின்னால் தானும் செய்யாமல், அவரையும் செய்துகொள்ள விடாமல், தானும் துன்புற்று, அவரையும் துன்புறுத்தி வருவர்.

"அறிவாளி ஒருவன் தன்னை அறிவாளி என நினைப்பது நல்லதல்ல" என்பது ஓர் அறிவாளியின் கருத்து. "அது தவறு" என்பது நமது கருத்து. "தன்னை, அறிவாளி" என நினைத்துக் கொள்ளும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால், மற்றவர்களை "அறிவற்றவர்கள்" எனக் கருதுவதுதான் தவறு. ஏனெனில் அறிவு உள்ளவர், அறிவு அற்றவர் என எவரையும் பிரிக்க இயலாது. ஒவ்வொருவரும் அவரவர் துறையில் சிறிது அறிவுடையவராகவே காட்சியளிப்பர். "எல்லாம் அறிந்தவரும், ஏதும் அறியாதவரும் இவ்வுலக மீது இல்லை" என்ற தாயுமானவர் வாக்கும் இதனை மெய்ப்பிக்கும்.

ஒருவரை அறிவு அற்றவர் என்பதைவிட அறிவு குறைந்தவர் என்பதே உண்மையானதாக விருக்கும்,

"செல்வம்" என்பதுகூட அப்படியே. ஐந்து ஆயிரம் சொத்து உள்ள ஒருவன் 500 ரூபாய் சொத்துள்ளவனுக்குப் பணக்காரனே. ஆனால், இவன் 5ப ஆயிரம் சொத்துள்ளவனுக்கு ஏழைதானே! அவனும் 5 லட்சம் சொத்துள்ளவனுக்கு ஏழைதானே! இவர்களில் யார் செல்வர் என்று எப்படிக் கூறுவது?

திருக்குறளில் 40-ம் அதிகாரத்தில் கல்விச் செல்வத்தை வற்புறுத்திக் கூறிய வள்ளுவர் 42-ல் கேள்விச் செல்வத்தை மிக உயர்த்திக் கூறி, பின்னரே 43-ல் அறிவுச் செல்வத்தை விளக்கிக் காட்டுகிறார். இதிலிருந்து அறிவுச் செல்வம் கல்விச் செல்வத்திலும், கேள்விச் செல்வத்திலும் மிகமிக உயர்ந்த செல்வம் என்றாகிறது.

தம்பி! நீ அறிவுடையவனாக இருக்க விரும்புகிறாயா? அப்படியானால் அறிவுச் செல்வத்தைப் பெறு! பெரியோரை வணங்கு! எளியோர்க்கு உதவு! பொருளைப் போற்று! உடலை ஓம்பு! நன்றாகப் படி! அதிகமாகக் கேள்! பொறுமையாகச் சிந்தி! குறைவாகப் பேசு! ஒழுக்கமாக நட!

ஆம். நட! வெற்றி பெறுவாய்! அப்பொழுதுதான் நீயும் அறிவுச்செல்வம் பெற்ற நன்மகனாய்த் திகழ்வாய்! உன்னைப் போன்ற அறிவுச் செல்வங்களை நிறையப் பெற்றால்தான் பெற்ற நாடும் வளர்த்த மொழியும் சிறப்படையும்!

வாழட்டும் தமிழகம்!

# 6. மக்கட் செல்வம்

"பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழுங்கள்" என்று நம் பெரியோர்கள் வாழ்த்துவது உண்டு. அது பதினாறு பிள்ளைகளைப் பெறுவதல்ல. வாழ்வு பெரு வாழ்வாக ஒளிவீசுவதற்குப் பெறவேண்டிய பேறுகள் பதினாறு என்பதே அதன் பொருள். இவை மனை, மனைவி, மக்கள், தாய், நீர், நிலம், கால்நடைகள், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், வலிமை, ஏவல், பொன், மணி, புகழ் எனப் பதினாறாம்.

இவற்றுள் ஒவ்வொன்றும் சிறந்த செல்வமே. எனினும் மக்கட் செல்வமே தலைசிறந்த செல்வமாகும் என்பது ஒரு புலவர் பெருமகனது கருத்து. இதனை,

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும் மற்
றென்னுடையரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்

என்ற கவிதை மெய்ப்பிக்கும்.

கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த அறிவுடைநம்பி இன்னும் ஒருபடி தாண்டி இக்கருத்தை வலியுறுத்துகிறார். அது,

படைப்புப் பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறு குறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியும் துழந்தும்

நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்ந்து
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை யில்லை தாம் வாழும் நாளே என்பதே.

"மக்கட்பேறு" என்பது திருக்குறளில் ஏழாவது அதிகாரமாகும். "மக்கள்" என்பது ஆண், பெண் இரண்டையும் குறிக்கும். குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர், "புதல்வரைப் பெறுதல்" என இதற்குத் தலைப்புக் கொடுத்துள்ளார். புதல்வர் என்பது பெண் மக்களைக் குறிக்காது நீங்கிவிடும். இது ஒரு மாறுபட்ட கொள்கை என்பது அறிஞர் பெருமக்களின் கருத்து. உண்மையில். வள்ளுவரது கொள்கை ஆண் பெண் ஆகிய இருவகைக் குழந்தைகளையும் ஒப்பாகக் கருதுவதேயாம். அதற்கு ஏற்றது "மக்கட் பேறு" என்பதே. இவ்வுண்மையை இத்தலைப்பில் வருகிற குறள்களில், "மக்கள்" என எட்டுக் குறள்களில் காணப்படுவதாலும், "புதல்வர்" என எந்தக் குறளிலும் காணப்படாமையாலும் நன்கு அறியலாம்.

பிள்ளைத்தாய்ச்சியராயிருக்கும் பெண்கள் அன்பு உள்ளங்கொண்டு அமைதியான வாழ்வு வாழ்ந்தாக வேண்டும். அப்பொழுதுதான் பிள்ளைப்பேறு எளிதாகவும் மகிழ்வாகவும் இருக்கும். வீரமுள்ள குழந்தைகளைப் பெறுவதற்காகப் பிள்ளைத்தாய்ச்சிகளுக்கு வீரர்களின் வரலாற்றைக் கூறுவதும் உண்டு. கருவுற்ற பெண்ணின் உடல்நலம் மனநலம் அனைத்தும் குழந்தையையும் சென்றடையும் என்பது முற்றிலும் உண்மை.

மேல் நாட்டு மருத்துவமுறை வளர்ச்சியும், புதிய நாகரிக வளர்ச்சியும், தாய் சேய் நல விடுதிகளின் வளர்ச்சியும் அதிகமாக ஏற்பட்டுள்ள காலம் இக் காலம். எனினும், இக் காலத்திலேற்படுகின்ற பிள்ளை தாய் இழப்புகளின்

எண்ணிக்கை எக்காலத்தும் இருந்ததில்லை. இதை எண்ணும்பொழுது பழங்காலத்திய தமிழக மருத்துவ முறை. பிள்ளைப் பேற்று மருந்து முறை ஆகியவைகளின் பெருமை ஒருவாறு நன்கு விளங்கும்.

குழந்தை வளர்ப்புக்கலை ஒரு தனிக் கலையாகும். இக் கலையைக் கல்லூரி மாணவிகள் அறியார்கள். அதை நன்கு அறிந்து அறிவிப்பவர்கள் நம் நாட்டு மூதாட்டிகளே. நாகரிகப் பெண்மணிகள் அவர்களைக் "கிழடுகள்" என்பார் கள். நன்கறிந்த பெண்மணிகள் அவர்களைக் "கிழட்டுச் செல்வங்கள்" என்பார்கள். "குழந்தைகளின் அணைப்பை கொண்டிருக்கின்ற தாய்மார்கள், கணவரது அணைப்பி லிருந்து விலகி இருத்தல் வேண்டும். இன்றேல் பால் சுரக்கும் உறுப்பில் காமநீர் சுரந்துவிடும். அது கைப் பிள்ளைகளின் வயிற்றில் செரிக்காது. அதனால் வாந்தி, வயிற்றுப்போக்கு. மாந்தம் முதலிய நோய்கள் குழந்தை களுக்கு வந்து துன்புறுத்தும்" என்பது இக் கிழட்டுச் செல்வங்களின் கருத்து. இச் செல்வங்கள் இல்லாத விடு...? ? ?

குழந்தைகளைத் தொட்டிலிலிட்டு உறங்க வைக்கின்ற தமிழகத்தின் தாலாட்டுப் பாடல்கள் சுவையுடையன. அப்பாடல்களுக்கு உறங்கவைக்கும் வலிமை மட்டுமின்றி, இசையுணர்வு, சொல்லறிவு, சிறந்த பண்பு, விரிந்த மனம், வீர உணர்ச்சி ஆகியவைகளைக் குழந்தைகளுக்கு ஊட்டும் ஆற்றலும் உண்டு.

சைவ சமயத் தலைவர் ஒருவரை சமண சமயத் தலைவர்கள் நீற்றறையில் (சுண்ணாம்புக் காளவாயில்) தள்ளிப் பூட்டியதாகவும், இந்நேரம் எரிந்து சாம்பலா யிருப்பார் என்று எண்ணித் திறந்து பார்த்தபொழுது, அவர் உயிருடன் மீண்டதாகவும் "நெருப்பு உள்ளே

எப்படி இருந்தது?'' என்று அவரை வினவியபோது, ''ஈசன் திருவடியில் நான் இருந்தேன். அது எனக்கு மிகவும் குளிர்ச்சி யாக இருந்தது'' என்று பாடியதாகவும் தேவாரம் கூறுகிறது. அப்பாடல் இது:

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கு இளவேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

கருத்து மட்டுமல்ல. இப்பாடலில். ஒரு நயமும் புதைந்து கிடக்கிறது. அது மெய், வாய், கண், மூக்குக்கு, செவி ஆகிய ஐம்புலனுக்கும் குளிர்ச்சியும். இனிமையும் தருகின்ற ஐந்து பொருள்களை இதில் காண்பதேயாம்.

மாசில் வீணை— காதுக்கு, மாலை மதியம்—கண்ணுக்கு, வீசும் தென்றல்— மூக்குக்கு, வீங்கு இளவேனில் —உடம்பிற்கு, தாமரைப் பொய்கையின் நீர்— நாவிற்கு, இப்புதை பொருளைக் காணும்போது நமது உள்ளமும்கூட குளிர்ச்சியும், மகிழ்ச்சியும் அடைகின்றது.

நாவுக்கரசர் ஐம்புலன்களுக்கு ஐந்து பொருள்களைக் குறிப்பிட்டுக் காட்டினார் என்றாலும் ஐம்புலன்களுக்கும் இனிமைதரும் ஒரே பொருளைக் காட்ட நம்மால் முடியுமா? முயன்று தேடுவோம் வாருங்கள்.

1. வீணை—காதுக்கு இனிமை தரும்.
கண்ணுக்கு? மூக்குக்கு? நாவுக்கு? உடம்புக்கு?

2. கற்கண்டு—நாவுக்கு இனிமை தரும்.
காதுக்கு? மூக்குக்கு? கண்ணுக்கு? உடம்புக்கு?

3. மலர்—கண்ணுக்கும் மூக்குக்கும் இனிமை தரும்.
உடம்புக்கு? நாவுக்கு? காதுக்கு?

4. பலாச்சுளை—நாவுக்கு, கண்ணுக்கு, மூக்குக்கு இனிமை தரும்.

காதுக்கு? உடம்புக்கு?

5. கிளி—கண்ணுக்கு, காதுக்கு, உடம்புக்கு இனிமை தரும்.

நாவுக்கு? மூக்குக்கு?

என்ன செய்வது? முயன்றோம் நம்மால் முடியவில்லை. மேலை நாட்டினருங்கூட, ஐம்புலன்களுக்கும் இனிமை தரும் ஒரு பொருளைக் கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை. ஆனால், அத்தகைய ஒரு பொருளை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே வள்ளுவர் கண்டுபிடித்துக் கூறியிருக்கிறார். அது,

> கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள என்பதே.

வள்ளுவர் ஆணாக இருந்ததால் இவ்வாறு கூறியுள்ளார். பெண்ணாக இருந்திருந்தால்,

> கண்டு, கேட்டு, உண்டு, உயிர்ந்து உற்றறியும் ஐம்புலனும்
> திண்டோளான் கண்ணே உள.

என்று கூறியிருப்பார். இதிலிருந்து மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களுக்கும் இனிமைதரும் பொருள் இவ்வுலகில் பெண்ணுக்கு ஆணும், ஆணுக்குப் பெண்ணுமே என்று தெரிகிறது.

வள்ளுவர் அத்தகைய ஆணையும் பெண்ணையும் சேர்ந்துவைத்து அவர்களுடைய ஐம்புலனுக்கும் இன்பம் பயக்க வேறொரு பொருளும் உண்டு என்று சுட்டிக்காட்டுவது நமக்குப் பெரும் வியப்பாக இருக்கிறது. அப்பொருள்தான் மக்கட் செல்வம்!

உச்சி முகர்தல்—மூக்குக்கு இன்பம்
ஈன்ற ஞான்று—கண்ணுக்கு இன்பம்
அவர் சிறுகை அளாவியகூழ்—வாய்க்கு இன்பம்
மக்கள் மெய் தீண்டல்—உடற்கின்பம்
மற்று அவர் சொற்கேட்டல்—இன்பம் செவிக்கு

எப்படி வள்ளுவர்? எப்படி அவர் காட்டிய மக்கட் செல்வம்?

தவறு செய்யும் குழந்தைகளை 'அடித்து வளர்ப்பது நல்லது' என்பது சிலரது கருத்து. 'அதன் மனம் போன படியே போகவிட்டு வளர்ப்பது நல்லது' என்பது சிலரது கருத்து. 'அச்சுறுத்தி மிரட்டி வளர்ப்பது நல்லது' என்பது இன்னும் சிலரது கருத்து. 'நல்ல கட்டுப்பாட்டிலும், ஒழுங்கு முறையிலும் வளர்ப்பது நல்லது' என்பது வேறு சிலரது கருத்து. 'நல்ல பிள்ளை, நல்ல பிள்ளை என ஊக்கி வளர்ப்பது நல்லது' என்பது பலரது கருத்து ''எதற்கும் ஓர் அளவு இருக்கவேண்டும்'' என்பது எனது கருத்து!

சிறு குழந்தைகளுடைய மனம், படம் எடுக்கப் பயன் படுத்தும் சாம்பல் வண்ணமுள்ள கண்ணாடியைப் போன்றது. எது தன் எதிரில் தோன்றுகிறதோ அதை அப்படியே தன்னுள் பதித்துக்கொள்ளும் தன்மை வாய்ந்தது மோர்க் காரி மோர் விற்பதைக் கண்டால் தானும் தன் தலையில் ஒரு கொட்டங்கச்சியை வைத்துக்கொண்டு 'மோர், மோர்' எனக் கூறி வரும். குதிரை ஏறிச் செல்வோரைக் கண்டால் தானும் ஒரு குட்டிச் சுவரின் மீது ஏறி ஆடி ஆடி குதிரையை ஒட்டுவ தாக மகிழும். உண்பதைக் கண்டால் உண்ணும், உடுத்துவதைக் கண்டால் உடுத்தும். ஆடுவதைக் கண்டு ஆடும், பாடுவதைக் கண்டு பாடும். வாழ்த்துவதைக் கண்டால்

வாழ்த்தும், வைவனைக் கண்டால் வையும். ஏனெனில் அது ஆராய்ந்து கொண்டிருக்கும் தன் கண்களால் அகப்பட்டதைப் பதிப்பித்துக் கொள்ளும் உள்ளம் படைத்தது. அதன் உள்ளத்தைப் படப்பதிவுக் கண்ணாடி (Photo plate) என்றால், அதன் கண்களைப் படப்பிடிப்புக் கண்ணாடி (Phoeo lens) எனக் கூறலாம். ஆகவே மக்கட் செல்வத்தை வளர்ப்பதில் மிக்க விழிப்பாக இருத்தல் வேண்டும்.

தம்பித்துரை உபதேசியார் என்பவர் எனது கிறித்தவ நண்பர். அவர் உண்ணும்போதும், உறங்கும் போதும், விழிக்கும் போதும், பள்ளிக்குச் செல்லும் போதும், ஊருக்குப் போகும் போதும் இறைவனை வணங்குவது உண்டு. அவ்வாறு வணங்கும்போது, தன் பிள்ளைகளையெல்லாம் அருகில் அழைத்து வைத்துக்கொண்டு ''ஜபம் செய்வோமாக!'' என்று கூறியே இறைவனை வேண்டத் தொடங்குவார். ஒருநாள் தன் ஐந்து வயதுக் குழந்தையைக்கூப்பிட்டு ''பிரம்பை எடுத்துவா '' என்றார். கொண்டு வந்து கொடுத்தது. அவர் அக் குழந்தையை நோக்கி, ''இருமுறை சொல்லியும் கேளாததால் இப்போது நான் உன்னை அடிக்கப் போகிறேன்'' என்றார். அதற்கு அந்தக் குழந்தை, ''அப்படியானால் ஜபம் செய்வோமாக!'' என்றது உடனே உபதேசியார் பிரம்பை நழுவவிட்டுக் குழந்தையை நெஞ்சில் அணைத்துக் கொண்டு கண்ணீர் உகுத்தார். அக்காட்சியை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

அவர் பொடி போடுவது உண்டு. ஆனால் குழந்தைகள் அறியும்படி போடுவதில்லை. அவருக்கு மனைவியின் மீது சிறிது கோபம் வரும். அப்போது அவர் ''பிள்ளைகளே! நீங்கள் வெளியே போகலாம்'' என்பார். போய்விடுவார்கள்! மனைவியை அருகில் அழைத்து, ''நீ மனுசியா'' என்று வைவார். பிறகு, ''பிள்ளைகளே! உள்ளே வரலாம்'' என்று

அழைத்துக் கொள்ளுவார். முதலில் அவர் தவறு செய்வ தில்லை. தம்மையே திருத்திக்கொள்வார். திருத்திக் கொள்ள முடியாத பல பழக்கவழக்கங்களைப் பிள்ளைகளின் எதிரே அவர்கள் அறியும்படி செய்யமாட்டார் அறிந்தால் பிள்ளைகள் கெட்டுவிடுவார்கள் என்பது அவரது முடிவு. தமிழகத்துப் பெற்றோர்களெல்லாம் தம்பித்துரை உபதேசி யாரானால், தமிழகம்...? ? ?

*தக்கார் தகவிலர் என்பது அவரவர்*
*எச்சத்தால் காணப் படும்*

என்பது வள்ளுவர் வாக்கு. எச்சம் என்பதற்கு எச்சில் உண்மை, குறை, செயல், மிச்சம் பறவை, மலர், பிள்ளை எனப் பல பொருள் உண்டு. பரிமேலழகர் எடுத்துக் கொண்ட பொருள் "பிள்ளை" என்பது, அதுவே சரி. ஆனால் மேற் கொண்டு அவர் பொருள் விளக்கும் முறையே மாறானது.

"ஒருவர் தக்கவரா அல்லவரா என்பதை அவரவர் களுக்கு மக்கள் உண்மையாலும் இன்மையாலும் அறியப் படும். தக்கார்க்கு எச்சமுண்டாதலும், தகவிலர்க்கு இல்லை யாதலும் ஒரு தலை" யெனவும் கூறியிருக்கிறார். இதை நம்மால் ஒப்புக்கொள்ள இயலாது. ஒப்புக் கொள்வதானால் தாயுமானவர், இராமலிங்க அடிகளைப் போன்றவர்களை யும் தகவிலர் எனக் கூறும்படி நேர்ந்துவிடும். அவர்களைத் துறவிகள் என ஒதுக்கிவிட்டாலும், இராமகிருட்டின பரம அம்சர், ஏன்? திருவள்ளுவரையே மக்கள் இன்மையால் தகவிலர் எனக் கூறவேண்டி நேர்ந்துவிடும். இதை உலகம் ஏற்காது.

பெற்றோர்கள் எதையும் மறைத்துச் செய்யவும் மறைத்துப் பேசவும் ஆற்றல் பெற்றவர்கள். குழந்தை

களுக்கு இத்தகைய ஆற்றல் இராது. அவர்கள் வெள்ளை மனம் படைத்து வெளிப்படையாக நடக்கவும், பேச்வும் செய்வர். அவர்களிடத்துப் பழகி, அவர்களுடைய பேச்சு, நடத்தை பழக்க வழக்கங்கள், குணம், ஒழுக்கம், பண்பாடு ஆகியவைகளை அறிந்து, அவர்களது பெற்றோர்கள் தக்காரா? தகவிலரா? என்பதை நன்கு அறியலாம் என்ற வள்ளுவரது கருத்து எவ்வளவு அழகானது. சிறந்த உரையாசிரியராகிய பரிமேலழகரே இதை மக்களுக்கு வழங்கியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்.

"இளமையில் கல்" என்பது தமிழ்ப் பாட்டியின் கட்டளை. பிள்ளைகளைப் படிக்க வைப்பது பெற்றோர்களின் கடமை. கல்வி பயின்று வரும்பொழுது குழந்தைகளின் மனப் போக்கை அறியவேண்டும் அவற்றின் எதிர்காலத்தைப்பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதற்குரிய கல்வியையே கற்பிக்கவேண்டும். குறிக்கோள் இல்லாத கல்வி பயனற்றது. அது செல்ல வேண்டிய இடத்தைக் குறியாமல் சாலையில் நடந்துகொண்டே இருப்பதைப் போன்றது.

கல்வியின் அருமை, பெருமைகளை இளமை நன்கு அறியாது அவர்களின் விளையாட்டுப் புத்தியும் கல்வியைக் கெடுத்துவிடும். சில துடுக்குத் தனத்தினால் துள்ளித் திரியும். அத்தகைய பிள்ளைகளின் மீது பெற்றோர் அதிக அக்கறை கொண்டு திருத்தியாக வேண்டும். அன்பும், ஆசையும் கொண்டு திருத்தாமல் விடுவது அவர்களுக்குப் பெருந் தீமை விளைவிப்பதாகும். பெற்றோர் தம் குழந்தைகளுக்குக் கல்வியைக் கொடுக்காமல் எவ்வளவுதான் செல்வத்தைக் கொட்டிக் குவித்து வழங்கினாலும் அது அவர்களுக்குப் பயன் தராது.

பிள்ளைகளின் உடல் வளர்வதைப் போலவே அவர்களது அறிவும் வளர்ந்து வரும். நாளுக்கு நாள் இவர்களது சிந்தனையும் வலுப்பெற்று வரும். அதனால் அவர்கள் தங்கள் நோக்கங்களைப் பெருக்கிக்கொண்டே வருவார்கள். அவர்களது முதல் அறிவு கேள்வியாலேயே வளர்கின்றது. ஆகவே, நமக்கு எவ்வளவு தொல்லைகள் இருந்தாலும் அமைதியாக இருந்து அவற்றிற்கு எல்லாம் விடை கூறியாக வேண்டும். விளையாட்டிற்காகவும் பொய் சொல்லக் கூடாது. வேடிக்கைக் காகவும் ஏமாற்றக்கூடாது. எதையும் கூறி அச்சுறுத்தலாகாது. சிற்றோடையில் ஊறி ஓடும் தெளிந்த நீரென அவர்கள் உள்ளத்தில் அறிவு தானாகச் சுரந்து வழியும். அதனை வளர்க்கப் பெரிதும் முயலவேண்டும். அதைத் தடைப் படுத்தாமலாவது இருந்துவிட வேண்டும் பழமையைப் புகுத்தினாலும் பகுத்தறிவு கொண்டு புகுத்தவேண்டும். "இரண்டு கழுதைகளுக்கு மத்தியில் போகாதே; போனால் சாத்திரத்திற்காகாது" என்று கூறலாகாது. "இரண்டு கழுதைகளுக்கு மத்தியில் போகாதே: போனால் எந்தக் கழுதையாயினும் உதைக்கும்" என்று கூறுவது நலமாகும். இம்முறை குழந்தைகளின் அறிவை வளர்க்கப் பெருந்துணை செய்யும்.

பழங்காலத் தாய்மார்கள் குழந்தைகளின் உடலை, அறிவை மட்டும் வளர்த்து வரவில்லை. அவர்களின் வீரத்தையும் வளர்த்து வந்தார்கள். அக்காலத்தில் தமிழ் மகள் ஒருத்தி,

மகனைப் பெற்றுக் கொடுப்பது எனது கடமை
அவனைச் சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடமை
அவனை நல்வழி நடத்துதல் வேந்தனின் கடமை
அவனுக்கு வேல்வடித்துக் கொடுத்தல்
கொல்லனின் கடமை

போர்க்களம் புகுந்து யானைகளைக் குத்தி வீழ்த்திக்
களிப்புடன் திரும்புதல் காளையின் கடமை.

என்று கூறியிருப்பதால் இவ்வுண்மையை அறியலாம்.

பழந்தமிழர்கள் தம் மக்களின் உடல், அழகு, அறிவு, ஆற்றல், வீரம் ஆகியவற்றை வளர்ப்பதைவிட அவர்களின் ஒழுக்கத்தை வளர்ப்பதையே முதற்கடமையாகக் கொண்டிருந்தார்கள். அதனை,

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்
ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை
ஒழுக்கம் விழுப்பம் தரும்
இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்

என்பனவற்றால் நன்கு அறியலாம்.

தமிழகத்தில் தமிழாசிரியர்களால் நடத்தப்படும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில், தமிழ் இலக்கியங்களில், இருக்கும் தமிழ்ப் பண்பாடுகளைத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு விளக்கிக் கூறுவதுண்டு. அவை,

(1) இந்திரர் அமிர்தம் கொடுப்பதாயினும், அது மிகச் சுவையாக இருக்கிறது என்று தமிழர் தனித்து உண்பதில்லை. பழியோடு இவ்வுலகமே வருவதானாலும் கொள்வதில்லை. புகழ் எனில் உயிரும் கொடுப்பர்.

(2) பெற்ற தாய் பசித்திருக்கப் பார்ப்பது, பிறந்த மகனுக்குப் பெரிய இழிவு. இருப்பினும் சான்றோர்களால் பழிக்கப்பட்ட செயல்களைச் செய்து தாயின் பசியைப் போக்க நினைப்பதில்லை

(3) உயிரை இழப்பதா? மானத்தை இழப்பதா? என்ற ஒரு நிலை வந்தால், உயிரை இழந்தேனும் மானத்தைக் காப்பாற்றுவர். ஏனெனில் அவர் உடல் நிலையாமையையும் மானத்தின் நிலையுடைமையையும் அறிவர் என்பனவாம்.

ஒருவன் பெறவேண்டிய பேறுகளில், அறிவறிந்த நன் மக்களைப் பெறுவதே சிறந்த பேறு. பண்புடைய நன் மக்களைப் பெற்று ஒருவனது குடும்பத்தை, ஏழு தலைமுறை ஆயினும் துன்பம் சென்றடையாது. தம் புதல்வரைத் தமது பொருள் என்றும், தன் மக்களின் பொருள் அவரவர் செயலைப் பொறுத்தது என்றும் அறிஞர் கூறுவர். தம் மக்கள் சேறுபடிந்த சிறுகையால் குழப்பிய கூழ் அமுதத்தினும் மிக இனிமை பயப்பதாக இருக்கும். யாழின் ஒலியும், குழலின் ஓசையும் இனிமையாயிருக்கின்றன என்று கூறுபவர்கள், தம் மக்களின் மழலைச் சொற்களைக் கேட்டவர்களல்லர். தன் மகனைச் சிறந்த அறிஞன் எனச் சான்றோர்களால் கூறக் கேட்ட தாய், அவனைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சி யைவிடப் பெருமகிழ்ச்சி அடைவாள். தான் பெற்றபிள்ளை தன்னைவிட அதிக அறிவைப் பெற்று விளங்குவது தனக்கு மட்டுமல்ல, பிறருக்கும் மகிழ்ச்சியைத் தருவதாகும். "ஒரு நல்ல தந்தை தன் மகனுக்குச் செய்யும் பேருதவி அவனைக் கல்வி, அறிவு, ஒழுக்கம் உள்ளோரின் அவையிலே முதன்மை யாக இருக்கும்படி செய்தல். ஒரு நன்மகன் தன் தந்தைக்குச் செய்யும் பேருதவி இவன் தந்தை பெரும்பேறு பெற்றான் எனப் பிறர் கூறும்படி நடத்தல்" என்பன வள்ளுவரது கருத்துக்கள்.

தமிழும் தமிழரும் தமிழகமும் சிறந்து விளங்க வேண்டு மெனில் நாட்டில் நன்மக்கள் பலர் பிறந்து வளர்ந்தாக வேண்டும் என்பது சான்றோர் கருத்து.

வாழ்க தமிழகம்

முத்தமிழ்க் காவலர்

## கி. ஆ. பெ. விசுவநாதம் நூல்கள்

| | | |
|---|---|---|
| தமிழ்ச் செல்வம் | ... | ... |
| தமிழின் சிறப்பு | ... | ... |
| அறிவுக் கதைகள் | ... | ... |
| எனது நண்பர்கள் | ... | ... |
| வள்ளுவரும் குறளும் | ... | ... |
| வள்ளுவர் உள்ளம் | ... | ... |
| திருக்குறள் கட்டுரைகள் | ... | ... |
| திருக்குறளில் செயல்திறன் | ... | ... |
| திருக்குறள் புதைபொருள் (முதற் பகுதி) | | |
| திருக்குறள் புதைபொருள் (இரண்டாம் பகுதி) | | |
| மும்மணிகள் | ... | ... |
| நான்மணிகள் | ... | ... |
| ஐந்து செல்வங்கள் | ... | ... |
| ஆறு செல்வங்கள் | ... | ... |
| அறிவுக்கு உணவு | ... | ... |
| தமிழ் மருந்துகள் | ... | ... |
| மணமக்களுக்கு | ... | ... |
| இளங்கோவும் சிலம்பும் | ... | ... |
| நல்வாழ்வுக்கு வழி | ... | ... |
| எண்ணக்குவியல் | ... | ... |
| வள்ளலாரும் அருட்பாவும் | ... | ... |
| வானொலியிலே | (அச்சில்) | ... |
| மாணவர்க்கு | ... | ... |
| திருச்சி விசுவநாதம் வரலாறு (மா. சு. சம்பந்தம்) | ... | ... |

## பாரி நிலையம்

184, பிராட்வே : : சென்னை-600 108

Wrapper Printed at
Eskay Art Printers, Madras-5. Phone : 844727